பக்கங்கள்: 11
விலை : 30/-
# காலைக்கதிர்
Kalaikkathir
விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஆவணி 21 திங்கட்கிழமை 06.09.2021 கதிர் 305

## இது ரகசியம் அல்ல!

ரெலோ, புளொட் கட்சிகளின் அதிரடிக் கால்வாரும் நகர்த்தல்களினால் குழம்பிப்போயிருக்கும் தமிழரசுத் தரப்பு தனது அரசியல் குழுவை நேற்றுக் காலை அவசரமாக மெய்நிகர் முறையில் கூட்டியது. அதில் நடந்த சில விடங்களை இன்று பக்கம்02 »

## யாழில் நேற்றும் 5 பேர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மேலும் 5 பேர் கொரோனாத் தொற்றால் நேற்று உயிரிழந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற வேலணையைச் சேர்ந்த 80 வயதுடைய பெண் ஒருவரும், நீர்வேலியைச் சேர்ந்த 56 வயதுடைய பெண் ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.

தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட கீரிமலையைச் ☞2

## வவுனியாவிலும் நேற்று ஐவர் பலி

(வவுனியா நிருபர்)

வவுனியாவில் கொரோனாத் தொற்றால் நேற்று 5 பேர் மரணமடைந்துள்ளனர் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

மகாறம்பைக்குளம் பகுதியில் 77 வயது பெண் ஒருவரும், தவசிகுளம் பகுதியில் 57 வயது ஆண் ஒருவரும், சிறிநகர் பகுதியில் 77 வயது பெண் ஒருவரும், பட்டானிச்சூர் பகுதியில் 44 வயது ஆண் ஒருவரும், தோணிக்கல் பகுதியில் 74 வயது ☞2

## பருப்பு விலையும் திடீரென உயர்வு

ஒரு கிலோ பருப்பின் விலை 30 முதல் 40 ரூபா வரை உயர்த்தப்பட்டுள்ளது எனக் நுகர்வோர் மற்றும் வியாபாரிகள் தெரிவிகின்றனர்.

சந்தையில் கோதுமை மாவுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது எனவும், சில கடைகளுக்குக் கோதுமை மா ☞11

# ரெலோவும் புளொட்டும் பெருந் தவறு இழைப்பு

## சுமந்திரன் விசனம்

கொழும்பு, செப்ரெம்பர் 06

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலுக்கு அறிக்கை அனுப்பும் விடயத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பங்காளி கட்சிகளான ரெலோவும் புளொட்டும் பாரிய தவறிழைத்திருக்கின்றன என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஏ.சுமந்திரன் குற்றம் சுமத்திஇருக்கின்றார். ☞11



## உடல்களை வெளிமாவட்டத்திலும் தகனம் செய்வதற்கு நடவடிக்கை!

### யாழ்.போதனா பணிப்பாளர் சத்தியமூர்த்தி தெரிவிப்பு

(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணத்தில் கொரோனாவால் மரணிப்பவர்களின் சடலங்களை வெளிமாவட்டங்களில் தகனம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்றுப் ☞2



## ஜோர்ஜ் மாஸ்டர் காலமானார்



வேலுப்பிள்ளை குமாரு பஞ்சரத்தினம் (ஜோர்ஜ் மாஸ்டர்) தமது 85 ஆவது வயதில் நேற்று கிளிநொச்சியில் ☞11

## இந்திய மீனவர்கள் மீது வாள்வெட்டுத் தாக்குதல்

இந்தியாவின் கோடியாக்கரை மீனவர்கள் மீது இலங்கை மீனவர்களின் வாள்வெட்டு மற்றும் தாக்குதலுடன் பொருள் கொள்ளைச் சம்பவம் நேற்றும் தொடர்ந்தது எனத் தமிழக மீனவர்கள் தெரிவித்தனர்.

இந்தியாவின் கோடியாகரையில் இருந்து நேற்று மீன்பிடிக்கக் கடலுக்கு வந்த மீனவர்கள் மீது நேற்றுமுன்தினம் மாலை கோடியாக்கரையில் இருந்து 11 கடல்மையிலுக்கும் 12 கடல்மையிலுக்கும் இடைப்பட்ட தூரத்தில் யாழ்ப்பாணம் – வடமராட்சி திசையில் இருந்து 5 மீன்பிடிப் படகுகளில் சென்ற 15 இற்கும் மேற்பட்ட மீனவர்கள் 3 இந்தியப் படகுகள் மீது தாக்குதல் நடாத்தியதில் சிலர் காயமடைந்துள்ளனர். இவ்வாறு தாக்குதலை நடத்தியவர்கள் மீன்பிடி படகுகளில் இருந்த ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ☞11

## கொரோனாவில் பலியானவரின் சடலம் மாறுபட்டதால் குழப்பம்!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், செப்.06

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கொரோனா காரணமாக உயிரிழந்த ஒருவரின் சடலத்திற்குப் பதிலாக வேறு ஒருவரின் சடலம் கையளிக்கப் பட்டமையினால் அதனை மின் தகனம் செய்வதற்காக வவுனியா வரையில் கொண்டு சென்ற உறவினர்கள் பின்னர் மீண்டும் யாழ்ப்பாணத்துக்குத் திரும்ப எடுத்துவந்தனர்.

யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியைச் சேர்ந்த முதியவர் ஒருவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் 3ஆம் இலக்க விடுதியில் அனுமதிக்கப்பட்டார். இருந்தபோதும் சிகிச்சை பலனின்றி கடந்த 2ஆம் திகதி அவர் உயிரிழந்தார். உயிரிழந்தவரின் சடலம் தகனத்திற்காக நேற்றுக் காலை வவுனியாவிற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

அந்த உடல் இறந்த தமது உறவினருடையது ☞2

## பொறுமையின் எல்லையில் வடக்கு கடற்றொழிலாளர்கள்

### போராட்டத்தில் குதிக்கவும் தீர்மானம்

(இ.கலையமுதன்)

இந்தியக் கடற்றொழிலாளர்களின் எல்லை தாண்டிய சட்டவிரோதச் தொழில் முறைகளால் ஏற்படுகின்ற பாதிப்புக்களில் இருந்து தங்களைப் பாதுகாப்பதற்கு இலங்கை அரசு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்றும், பொறுமையின் எல்லையில் தாம் இருக்கின்றார்கள் என்றும் வடக்கு கடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும், இலங்கை அரசின் அசமந்தப்போக்கைக் கண்டித்துள்ள வடக்கு கடற்றொழிலாளர்கள், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீதிருந்த நம்பிக்கையையும் இழந்துள்ளனர் எனவும் தெரிவித்துள்ளனர்.

தமது கடல் ☞11

## 3,308 தொற்றாளர்கள் நேற்று அடையாளம்

கொழும்பு, செப்ரெம்பர் 06

இலங்கையில் நேற்று 3 ஆயிரத்து 308 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இதற்கமைய நாட்டில் இது வரை அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 62 ஆயிரத்து 767 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து மேலும் 2 ஆயிரத்து 81 பேர் குணமடைந்துள்ளனர்.

இதன்படி நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 84 ஆயிரத்து 557 ஆக உயர்வடைந்துள்ளது.

## கொரோனாவால் 189 பேர் சாவு

இலங்கையில் மேலும் 189 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதையடுத்து நாட்டில் இது வரையில் பதிவாகியுள்ள கொரோனா சாவுகளின் மொத்த எண்ணிக்கை 10 ஆயிரத்து 140 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் மரணமடைந்தவர்களில் 96 ☞2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பகிர்வது பொருத்தம் என்று நினைக்கிறேன்.

அதற்கு முதல் நேற்று இப்பத்தியில் குறிப்பிட்ட ஒரு வாசகத்தை நினைவூட்ட விரும்புகிறேன்.

தமிழரசுத் தலைவர் மாவை சேனாதிராசா இனியும் ஐக்கியம், ஒற்றுமை என்று தத்துவம் பேசிக் கொண்டு ரெலோ,புளொட்டுக்கு மடங்கிப் போவாரானால் கட்சிக்குள் அவருக்குச் சாத்துப்படி நடந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்று குறிப்பிட்டிருந்தேன்.

நேற்றுக் காலை தமிழரசின் அரசியல் குழுக் கூட்டத்தை அடுத்து மாவை சார்பு ஊடகம் ஒன்றில் ஒரு கயிறு அவிழ்ந்து விடப்பட்டது. கூட்டத்தில் மாவை சேனாதிராசா ஏதோ எகிறிக் குதித்து சத்தமிட்டார் என்றும், அதைக் கேட்டு எல்லோரும் அடங்கிப் போய் விட்டார்கள் என்ற மாதிரியும் பீலா விட்டிருந்தது அந்த ஊடகம். அப்படி எதுவும் நடக்கவில்லை.

மெய்நிகர் வழியான கூட்டம் என்பதால் சாத்துப்படிக்கும் வாய்ப்பிருக்கவில்லை. கூட்ட ஆரம்பத்தில் தலைவர் என்ற முறையில் பேசினார் மாவை.

ரெலோ, புளொட் தயாரித்து, விக்னேஸ்வரன் அணியுடன் சேர்ந்து ஒப்பமிட்ட அறிக்கை இன்னும் ஜெனிவாவுக்கு அனுப்பப்படவில்லை என்றும், ஏதேனும் மாற்றங்களுடன் தமிழரசினரும் விரும்பினால் இனியும் அதில் ஒப்பமிட்டு அனுப்ப முடியும் என ரெலோ தலைவர் செல்வம் தனக்குக் கூறியிருக்கின்றார் என்றும் பேசத் தொடங்கினார் மாவை.

அவ்வளவுதான். கூட்டத்தில் பங்குபற்றிய மிகுதி எட்டுப் பேருமே ஒருவர் விடாமல் - மாவையைக் கடித்துக் குதறாத குறையாகப் பாய்ந்தனர். மாவையார் மெல்லப் பின்வாங்கிக் கொண்டார். அதுதான் நடந்தது.

முன்னரெல்லாம் மாவையருக்காகக் குரல் எழுப்பும் வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவரும் கட்சியின் சிரேஷ்ட உப தலைவருமான சி.வீ.கே.சிவஞானம், இந்த மோசமான நிலைமை ஏற்பட கட்சித் தலைவர் மாவையே காரணம் என்று குறிப்பிட்டு நேற்று விளாசித் தள்ளினார். கட்சிக்குள் 'ஸேம் சைட்' கோல் அடிக்கப் படுவதாகவும் ஒரு பிடி பிடித்தார் அவர்.

ஸ்ரீதரன் தன் பங்குக்கு மாவையரையும் சுமந்திரனையும் ஒரு பிடிபிடித்தார்.

மொத்தத்தில் ரெலோ, புளொட்டின் நடவடிக்கையையும் அதற்குத் துணை போனவர் என கட்சித் தலைவர் மாவையையும் அனைவருமே விமர்சித்தனர். மாவையைச் சமாளித்துப் பேசியவர் என்றால், சுமந்திரன் மட்டுமே.

அங்கு இன்னொரு விடயத்தையும் சுமந்திரன் கூறினார் என அறியவந்தது.

ரெலோ, புளொட் நடவடிக்கையைத் தெரியப்படுத்தியதும் சம்பந்தன் ஐயா ஒரு விவகாரத்தைச் சுட்டிக்காட்டினார் என்றார் அவர்.

*"ஓ...! அவர்கள் இப்போது விக்னேஸ்வரனுடன் கூட்டு அமைக்கிற திட்டத்தில்தான் செயற்படுகிறார்கள் போல. எனக்கு அது தெரியுது. இப்ப... அவர்கள் கூட்டமைப்பு என்று பேசிறதில்லை. ரெலோ, புளொட் என்றுதான் அடிக்கடி பேசுகினம். அது தான் அவையின் திட்டம். அவர்கள் செய்வதைச் செய்யட்டும், நாங்கள் எங்கடை வேலையைச் செய்வோம். உரிய சமயத்தில் பார்க்கலாம்."* - என்று சம்பந்தன் ஐயா தம்மிடம் கூறினார் என சுமந்திரன் நேற்றைய கூட்டத்தில் தகவல் வெளியிட்டார்.

சம்பந்தன் ஐயா அப்படிச் சொல்லியிருந்தால், வீட்டுக்குள் தன்னை முடக்கிக் கொண்டிருக்கும் அந்த வயோதிபருக்கு இந்தத் தமிழ் அரசியல்வதிகளின் போக்கு, நிலைமை புரிந்த அளவுக்கு மாவை, சுமந்திரனுக்கும் கூட நிலைமை புரியவில்லை என்பதுதான் அர்த்தம்.

நேற்று மாலை கொழும்புத் தொலைக்காட்சி ஊடகம் ஒன்றில் கருத்து வெளியிட்ட சுமந்திரன், ஜெனிவாவுக்கு கடிதம் எழுதிய விடயத்தில் தமிழ்க் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் இரண்டும் பாரிய பிழை செய்திருக்கின்றன என்று குறிப்பிட்டார்.

ஆனால், பேட்டியின் கடைசியில் இந்த விவகாரத்தை நாம் கடந்து செல்வோம் என்றும் நம்பிக்கை வெளியிட்டிருக்கின்றார் அவர். அதாவது பழைய நிலைமை திரும்பும் என்ற 'சமாளிபிக்கேஷன்'!

அது, இவ்விடயத்தில், வெளியே வராத - அதிகம் வெளியுலகுடன் புழங்காத - சம்பந்தனுக்கு இருக்கின்ற தெளிவு, மாவையைப் போல சுமந்திரனுக்கும் இல்லை என்பதை வெளிப்படுத்தும் அளவுகோல்தான் என்று நான் கருதுகிறேன்.

சரி, ரெலோவும், புளொட்டும், விக்கி அணியுடன் சேர்ந்து ஒப்பமிட்டு ஜெனிவாவுக்கு அறிக்கை அனுப்பி விட்டன.

சுமந்திரன் தயாரித்த அறிக்கை என்னவாகும்? சிறிதரன், சாள்ஸ் நிர்மலநாதன், கலையரசன் என்ற 'ஜிஞ்ஞர்' குறூப் தனியாக அனுப்புவதாகக் கூறப்படும் அறிக்கை என்னவாகும்?

தமிழரசு இனி இப்போதைக்குப் பிரிந்து நின்று சம்பந்தன், சுமந்திரன், சாணக்கியன் என்று ஓரணியாயும், ஏனையோரைக் கொண்ட 'ஜிஞ்ஞர்' குறூப்பாகவும் அறிக்கை அனுப்ப வாய்ப்பில்லை.

சுமந்திரன் தயாரித்த அறிக்கையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஒப்பமிட்டு, கூட்டமைப்பின் அறிக்கையாக அனுப்பி வைப்பார் என்று தெரிகின்றது. ஏற்கனவே அது அனுப்பி வைக்கப்பட்டு விட்டதோ தெரியவில்லை.

மலிந்தால் சந்தைக்கு வரும். அப்போது கூறுகின்றேன்.

- மின்னல் -

## கொரோனாவில் பலியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அல்ல என சம்பந்தப்பட்டோர் தெரிவித்தமையை அடுத்து நேற்று மதியம் மீண்டும் அது யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டு பிரேத அறையில் ஒப்படைக்கப்பட்டது.

அந்தச் சடலம் பொதி செய்யப்பட்டுள்ள நிலையில் உங்கள் உறவின் உடல் அல்ல என எவ்வாறு கண்டுகொண்டீர்கள் என அவர்களிடம் வினாவப்பட்டது. உயிரிழந்தவரின் உறவுகள் கூறிய பதில் வைத்தியசாலை வட்டாரத்தையே உலுக்கி விட்டது.

உயிரிழந்த தங்களின் உறவினரின் ஒரு கையில் சில விரல்கள் இல்லை எனவும், ஆனால் இந்த பொதியில் உள்ள உடலத்தின் கையில் அத்தனை விரல்களும் பொதியில் தென்படுகின்ற காரணத்தால் நிச்சயமாக இது எமது உறவு அல்ல எனத் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து வைத்தியசாலைத் தரப்பு ஆராய்ந்தபோது உடல் மாறியிருந்தமை உறுதி செய்யப்பட்டது. இது தொடர்பில் வைத்தியசாலைப் பணிப்பணிப்பாளரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது குறித்த விடயத்தை அவர் உறுதி செய்தார்.

## உடல்களை வெளி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிற்பகல் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இதுவரை 20 சடலங்களைப் பாதுகாப்பதற்கான குளிரூட்டி வசதிகள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் காணப்படுகின்றன. இந்நிலையில் 15 சடலங்கள் தற்போது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

வைத்தியசாலையில் மேலதிகமாக சடலங்களை வைத்திருக்காமல் எரியூட்டும் நிலையங்களுக்கு அனுப்புவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றோம். நேற்று இரண்டு சடலங்களை அனுராதபுரம் மாவட்டத்தில் உள்ள எரியூட்டல் நிலையங்களுக்கு அனுப்பி இருக்கின்றோம்.

இது தவிர யாழ். மாவட்டத்திலுள்ள எரியூட்டும் நிலையத்திலும் சடலங்களை எரியூட்ட கிரமமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

தற்போது நிலைமை ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்றது. முன்னாயத்த நடவடிக்கைக்காக நாட்டிலுள்ள வேறு இடங்களிலுள்ள எரியூட்டல் நிலையங்களுடனும் தொடர்பில் இருக்கின்றோம்.

மரணமடைந்தவரின் உறவினர்கள் சிலரை எரியூட்டும் பகுதிக்கு அனுப்புவதுடன் உரிய முறையில் உடல் தகனம் செய்யப்பட்டு சாம்பலை கையளிக்கும் விடயத்தில் நாங்கள் சரியான முறையில் செயற்படுவோம் - என்றார்.

## கொரோனாவால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

ஆண்களும், 93 பெண்களும் அடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

## யாழில் நேற்றும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சேர்ந்த 78 வயதுடைய பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த 99 வயதுடைய பெண் ஒருவர் மந்திகை ஆதார மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார் என்று மருத்துவச் சான்றிதழ் வழங்கப்பட்டது. அவரது சடலத்தில் முன்னெடுக்கப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் கொரோனாத் தொற்றுள்ளமை கண்டறிப்பட்டது.

மந்திகை ஆதார மருத்துவமனை கொரோனா விடுதியில் சிகிச்சை பெற்ற பருத்தித்துறையைச் சேர்ந்த 77 வயதுடைய ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதன் மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனா நோயால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 276 ஆக உயர்வடைந்துள்ளது.

## வவுனியாவிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆண் ஒருவரும் என 5 பேர் மரணமடைந்துள்ளனர்.

மரணமடைந்த 5 பேரினது சடலங்களையும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றித் தகனம் செய்வதற்குச் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## மரண அறிவித்தல்



### ஞானப்பிரகாசம் பிரகாஸ்

(சுயாதீன ஊடகவியலாளர்)

வெள்ளாம் போக்கட்டி, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஞானப்பிரகாசம் பிரகாஸ் (சுயாதீன ஊடகவியலாளர்) 02.09.2021 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

இவர் காலஞ்சென்ற சின்னப்பு - ஆனாசி தம்பதியினரினதும், உரும்பிராயைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான மாசிலாமணி - மேரியம்மா தம்பதியினரதும் இளைய பேரனும் ஞானப்பிரகாசம் (லால்) மெற்றில்டா தம்பதியினரின் பாசமிகு இளைய மகனும், கிசோர் (முன்னாள் சாவகச்சேரி நகர சபை உறுப்பினர்), சர்மிலா (கிராம அலுவலர், பிரதேச செயலகம், தென்மராட்சி), பிரசாந் (Fox Resorts, Jaffna) ஆகியோரின் இளைய சகோதரனும் ஆவார்.

இவரின் உடல் இன்று (திங்கட்கிழமை) கோம்பயன் மயானத்தில் மின் தகனம் செய்யப்பட்டு, அஸ்தி அல்லாரை புனித செபமாலை அன்னை ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**வெள்ளம் போக்கட்டி, கொடிகாமம்.**

**தகவல்:குடும்பத்தினர்.**
**சி.ஞானப்பிரகாசம் - 0776531621**
**ஞா.கிசோர் - 0774897325**



காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கை தமிழர்களுக்கு அடைக்கலம் கொடுத்தவர்கள் தொடர்பில் விசாரணை



தமிழகக் கடல் வழியாக கனடாவிற்கு தப்பிச் செல்ல முயன்ற இலங்கைத்தமிழர்களுக்குஅடைக்கலம் கொடுத்தவர்கள் தொடர்பாக தேசிய புலனாய்வு அமைப்பு கடந்த சனிக்கிழமை மாலை ராமநாதபுரத்தில் விசாரணைகளை மேற்கொண்டுள்ளது.

புத்தளம் பகுதியைச் சேர்ந்த 24 ஆண்கள், 2 பெண்கள், ஒரு குழந்தை என 27 பேர் படகு ஒன்றின் மூலம் கடல் வழியாக கடந்த ஜூன் மாதம் 11 ஆம் திகதி தூத்துக்குடி வந்தனர்.

கேரளா வழியாக கனடா செல்ல திட்டமிட்டு மதுரையில் தங்கியிருந்த 27 பேரையும் ராமநாதபுரம், மதுரை கியூ பிரிவு பொலிஸார் கைது செய்தனர்.

நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி புழல் சிறையில் அடைத்தனர். இதற்கிடையில் இலங்கையில் இருந்து கனடா தப்பிச் செல்ல பெங்களூரில் பதுங்கியிருந்த இலங்கைத் தமிழர் 32 பேரை பெங்களூர் கியூ பிரிவு பொலிஸார் ஜூன் மாதம் 11ஆம் திகதி மாலை கைது செய்தனர்.

இவர்களுக்கு ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் அருகே மரைக்காயர் பட்டணத்தில் சிலர் அடைக்கலம் கொடுத்து வேதாளை கடற்கரையில் இருந்து மர்மப் படகில் இலங்கைக்கு தப்பிச் செல்ல உதவினார்கள் என விசாரணையில் தெரியவந்தது.

அதன்படி தமிழர்கள் சிலரை பெங்களூர் தனிப்படையினர் ஜூன் மாதம் 20ஆம் திகதி அழைத்து வந்து வேதாளை கடல் பகுதியில் நேரடி விசாரணை மேற்கொண்டனர்.

பல்வேறு கோணங்களில் தொடர்ந்து நடைபெற்று வந்த இந்த விசாரணை தேசிய புலனாய்வு அமைப்பிற்கு சமீபத்தில் மாற்றப்பட்டது.

இதைத் தொடர்ந்து அதிகாரி சண்முகம் தலைமையில் ஒரு குழுவினர் கடந்த சனிக்கிழமை ராமநாதபுரம் வந்தனர்.

மண்டபம் அருகே வேதாளை, சீனியப்பா தர்கா உள்ளிட்ட கடற்கரை பகுதிகளை பார்வையிட்டனர். இலங்கைத் தமிழர்களுக்கு அடைக்கலம்கொடுத்தார்எனசந்தேகிக்கப்பட்ட ஒருவரை பிடித்து ராமநாதபுரத்தில் வைத்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

# சூழ இருந்தவர்களால் 3 தடவைகள் தனிமைப்படுத்தப்பட்டார் மஹிந்தர்!



சூழ இருந்தவர்களுக்கு கொவிட் தொற்று உறுதியான நிலையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மூன்று தடவைகள் தனிமைப்படுத்தி வைக்கப்பட்டிருந்தார் எனக் கொழும்பு ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

அதேபோன்று அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் டலஸ் அழகப்பெரும 4 சந்தர்ப்பத்தில் தனிமைப் படுத்தப்பட்டிருந்தார். அமைச்சர் விமல் வீரவன்ஸ 03 தடவை தனிமைப்படுத்தப்பட்டிருந்தார்.

# இலங்கை உள்ளிட்ட நாடுகளுக்கு பயணத்தடையை நீக்கியது பிலிப்பைன்ஸ்

இலங்கை உள்ளிட்ட 10 நாடுகள் மீது விதித்திருந்த பயணத்தடையை நாளை (திங்கட்கிழமை) முதல் நீக்குவதற்கு பிலிப்பைன்ஸ் அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

டெல்டா கொரோனாத் தொற்று அச்சுறுத்தல் காரணமாக கடந்த ஏப்ரல் மாதம் முதல் இலங்கை உள்ளிட்ட 10 நாடுகளில் இருந்து வருகை தரும் பயணிகளுக்கு, அந்நாட்டு அரசாங்கம் தடை விதித்திருந்தது. இந்நிலையிலேயே குறித்த நாடுகளுக்கு விதித்திருந்த பயணத்தடையை நீக்குவதற்கு தீர்மானித்துள்ளதாக பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி அறிவித்துள்ளார். எனினும், நாட்டுக்கு வருபவர்கள் 2 வாரம் தனிமைப் படுத்தலில் இருக்க வேண்டியது அவசியம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# அரசின் சுற்றறிக்கையினை மீறி பணிக்கு அழைக்கப்படும் கர்ப்பிணித் தாய்மார்கள்

தனிமைப்படுத்தல் ஊரடங்கு காலப்பகுதியில் அரசால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையை மீறி சுகாதாரப் பணியாளர்களான கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் ஒரு வயதுக்குட்பட்ட சிறுவர்களைக் கொண்ட அரச பணியாளர்கள் பணிக்கு அழைக்கப்படுகின்றனர் எனக் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

இதன்படி, அரச தாதியர்கள் சங்கம், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் எழுத்து மூலமான முறைப்பாடொன்றை பதிவு செய்துள்ளனர்.

இவ்வாறு, கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் ஒரு வயதுக்குட்பட்ட சிறுவர்களைக் கொண்ட சுகாதாரப் பணியாளர்கள் வேலைக்கு அழைக்கப்படும் நிலையில், அவர்களுக்கு எதேனும் ஆபத்து ஏற்படுமாயின் அதற்கான பொறுப்பை சுற்றறிக்கையை மீறிச் செயற்படும் அதிகாரிகள் ஏற்க வேண்டுமென அரச தாதியர் சங்கத்தின் தலைவர் சமன் ரத்னபிரிய சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், சில வைத்தியசாலைகளின் பிரதானிகள் குறித்த விடுமுறைக்கான அனுமதியை வழங்கவில்லை என தமது சங்கத்துக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கோதுமை மாவுக்கு சந்தையில் தட்டுப்பாடு

கோதுமை மாவுக்கு தற்போது சந்தையில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்தியாவசியப் பொருள்களை பதுக்குதல் மற்றும் அதிக விலைக்கு விற்பனை செய்வதை தடுக்க நுகர்வோர் விவகார அதிகாரசபை தொடர்ந்தும் சோதனைகளை முன்னெடுத்து வருகின்றது.

அந்தவகையில் இந்த திடீர் சோதனையில் 32 ஆயிரத்து 597 மெற்றிக் தொன் சீனி மற்றும் 643.5 மெற்றிக் தொன் நெல் மீட்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை குறிப்பிட்டுள்ளது. இதேவேளை வவுனியா- கோவில் குளம் பகுதியில் நடத்தப்பட்ட சோதனையில் அரிசி மற்றும் கோதுமை மாவை நிர்ணயிக்கப்பட்ட விலையை விட அதிக விலைக்கு விற்பனை செய்த வர்த்தக நிலையமொன்று சுற்றிவளைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# அவசரகாலச் சட்ட ஒழுங்கு விதி தொடர்பான விவாதம் இன்று நாடாளுமன்றில் நடைபெறும்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் கடந்த 30 ஆம் திகதி அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட அவசர கால சட்ட ஒழுங்கு விதிகள் தொடர்பான பிரகடனம் இன்று திங்கட்கிழமை நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

இதனால் அன்றைய தினம் இடம்பெறவிருந்த வாய்மூல விடைக்கான கேள்விகளை மற்றுமொரு தினத்துக்கு ஒத்திவைப்பதற்கு நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு தீர்மானித்துள்ளது.

தற்பொழுது நிலவும் கொவிட் சூழ் நிலையைக் கவனத்தில் கொண்டு இந்த வாரத்தில் நாடாளுமன்ற அமர்வுகளை இன்றும், நாளையும், மாத்திரம் நடத்துவதற்கும் தீர் மானிக்கப்பட்டது.

இதன்போது ஜனாதிபதி கோட்டாபயவால் கடந்த 30 ஆம் திகதி அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட அவசரகாலச் சட்ட ஒழுங்கு விதிகள் தொடர்பான பிரகடனத்தை காலை 10 மணி முதல் மாலை 4.30 மணி வரை விவாதித்து சபையில் அனுமதிப்பதற்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் செப்டெபர் 02 கூடிய நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக தெரிவித்தார்.

பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆவது பிரிவால் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கு அமைய அத்தியாவசிய உணவுப் பொருள்களை வழங்குவதற்காக இந்த அவசரகால சட்ட ஒழுங்குவிதி அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது.

இன்று திங்கட்கிழமை முழு நாளும் வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக மாத்திரம் ஒதுக்குவதற்கு இதற்கு முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்தபோதும், குறித்த கேள்விகளைப் பிறிதொரு தினத்தில் எடுத்துக் கொள்ளவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு நாடாளுமன்றம் கூடவிருப்பதுடன் 11 மணி வரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

முற்பகல் 11 மணி முதல் மாலை 4.30 மணிவரை 1979 ஆம் ஆண்டு 61 ஆம் இலக்க அத்தியாவசிய பொதுச் சேவை சட்டத்தின் கீழான கட்டளை, இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு சட்டமூலம், உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழான கட்டளைகள், ஏற்றுமதி மற்றும் இறக்குமதி (கட்டுப்பாடு) சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகள் என்பன விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

இதனைத் தொடர்ந்து மாலை 4.30 மணி முதல் 4.50 மணிவரை சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டிருப்பதுடன் 4.50 மணி முதல் 5.30 மணிவரை சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான விவாதம் நடைபெறும். - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மன்னாரில் மின் தகன நிலையம் அமைக்க நிதி உதவி கோரல்!

மன்னார் மாவட்டத்தில் கொவிட்-19 மரணங்கள் தற்போது அதிகரித்துச் செல்லும் நிலையில் சடலங்களை வவுனியாவில் உள்ள மின் தகன நிலையத்துக்குக் கொண்டு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் உடனடியாக மின் தகன நிலையத்தை அமைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளமையால் மாவட்டத்தில் உள்ள அனைவரது ஒத்துழைப்பும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் வாரம் மன்னார் மாவட்டத்தில் மின் தகன நிலையம் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

கடந்த 31ஆம் திகதி மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலில் இந்தத் தீர்மானம் முன் வைக்கப்பட்டது.

இடம்பெற்ற கலந்துரையாடலுக்கு அமைவாக மின் தகன நிலையத்தை மன்னார் நகரசபை பிரிவில் உள்ள மன்னார் பொது மயான பகுதியில் அமைக்க முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

மின் தகன நிலையத்தை அமைப்பதற்கும், வாகனத்துக்கு பணம் கொடுத்து சடலங்களை அனைவராலும் ஏற்றி வர முடியாது என்பதால் வாகனம் ஒன்றை கொள்வனவு செய்யவும் சுமார் 3 கோடி ரூபா நிதி தேவைப் படுகிறது.

நிதி போதாமை காரணமாக அரச சார்பற்ற அமைப்புக்கள் ,வெளிநாட்டில் உள்ள நண்பர்கள், தனவந்தர்கள் முன் வந்து உதவி செய்ய முன்வர வேண்டும் என கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# கூட்டமைப்புக் குதர்க்கம்

தமிழ் அரசியல் கட்சிகள் – குறிப்பாகத் தமிழ்த் தேசியம் பேசுகின்ற கட்சிகள் – தமிழர் தலையில் மிளகாய் அரைப்பதை நிறுத்த வேண்டிய காலம் வந்து விட்டது. அதைச் செய்வதற்கு முதலில் அவர்களுக்கு ஒரு விடயத்தை நாம் தெளிவுபடுத்த வேண்டும்.

பௌத்த, சிங்களப் பேரினவாத அடக்குமுறை ஆட்சியின் கீழ் சொல்லொணாத் துன்ப துயரங்களை அனுபவித்து வரும் சிறுபான்மையினரான தமிழர்கள் மீட்சி பெறுவதாயின் அவர்கள், அவர்களின் கட்சியினர், அமைப்புக்களைச் சேர்ந்தோர் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும் என்பது நியாயமானதுதான். அதை நாமும் பல முறை – விடாது – வலியுறுத்தி வருகின்றோம். பல தரப்பினரும், குறிப்பாக தமிழர் தேசியத்தில் ஈடுபாடு கொண்டுள்ள சகல தரப்பினரும் வலியுறுத்தும் விடயம்தான் இது.

நேற்று மாலை கொழும்புத் தொலைக்காட்சி ஒன்றில் நடந்த நிகழ்ச்சியின் போது மனோ கணேசன் எம்.பியும் சுமந்திரன் எம்.பியும் கூட இதனையே வலியுறுத்தினர்.

ஐக்கியம் முக்கியம்தான். நாங்கள் வலியுறுத்தும் விடயம் தான். ஆனால் அந்த ஐக்கியம் முக்கியம் என்ற கோஷம் தமிழர்கள் தலையில் மிளகாய் அரைப்பதற்குரிய விடயமன்று. அதில் தரப்புகள் நீதியாகவும் நேர்மையாகவும் நடப்பது முக்கியம்.

தமிழர்களின் முக்கிய விடயம் ஒன்றில் பல்வேறு கருத்து நிலைப்பாடு கொண்ட கட்சிகள், தரப்புகள் ஒன்றுபட்டுச் செயற்படுவது என்பதுதான் இங்கு வலியுறுத்தப்படும் ஐக்கியம், ஒற்றுமை எல்லாம்.

பிரதான விடயங்களிலும், கொள்கைகளிலும் எதிரும் புதிருமாக முரண்பட்டுச் செயற்பட்டு, ஆளாளுக்குக் காலை வாரிக் கொண்டு, தேர்தல் சமயங்களில் தங்களின் வெற்றிக்காக 'ஐக்கியம் முக்கியம்' என்று தமிழ் மக்கள் தலைமையில் மிளகாய் அரைப்பது வேறு.

அந்த மிளகாய் அரைப்பைத் தமிழ் மக்கள் மீது செய்து, அவர்களின் காதில் தொடர்ந்து பூவைப்பதன் மூலம் அவர்களை மேலும் மேலும் பலவீனப்படுத்துகின்றார்கள் தமிழ் அரசியல் வாதிகள். குறிப்பாகத் தமிழ்க் கூட்டமைப்பு என்ற பெயரில் பதவி சுகம் அனுபவிக்கும் பிரகிருதிகள்.

இது விடயத்தில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மிகச் சுத்தமானவர். தேர்தல் வெற்றிக்காகக் கூடாத கூட்டம் கூடி மக்கள் தலையில் மிளகாய் அரைக்க முயலாதவர்.

நீதியரசர் விக்னேஸ்வரன் தலைமையிலான கூட்டணியின் நிலைப்பாடும் இதுவரை கட்டுறுதியாகவே இருக்கின்றது. எல்லா விடயங்களையும் ஒரு நிலைப்பாட்டிலேயே அவர்கள் அணுகுகின்றார்கள். ஆளையாள் கால் வாருபவர்களாக இல்லை. ஒரே அணியாகச் செயற்படுகின்றார்கள்.

ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புதான் பல விடயங்களில் சொதப்புகின்றது. மக்களை முட்டாளாக்க முயல்கின்றது.

சரியோ, பிழையோ இன்றைய நிலையில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் தமிழரின் தேசிய இனப்பிரச்சினை தொடர்பான விடயம் ஆராயப்படுவதுதான் தமிழ் மக்களின் பிரதான கரிசனைக்குரிய விடயம்.

தமிழ் மக்களின் பிரதான விடயத்தில் ஒன்றுபட முடியாத – ஒரு நிலைப்பட இயலாத – இந்த வண்டவாளப் பிரகிருதிகள், தேர்தல் என்ற வரும் போது வாக்குகளைச் சுருட்டி, பதவிகளைக் கைப்பற்றுவதற்காக 'ஐக்கியம்' என்ற தண்டவாளத்தில் ஏறி கொஞ்சமும் தடம் புரளாமல் வந்து மக்கள் தலையில் மிளகாய் அரைத்துச் செல்கின்றார்கள். இதுதான் படுபோக்கிரித்தனம்.

தமிழர்களின் பிரதான – மிகப் பிரதான – விவகாரங்களிலேயே ஒருவருக்கு ஒருவர் ஆப்படித்துக் கொண்டு, 'ஒற்றுமை' என்ற பெயரில் மக்களின் வாக்கைச் சுருட்டி, பதவிகளை ஆக்கிரமிப்பது மிகப் பெரிய தகிடுதத்தம்.

இதற்கு இந்தக் கட்டத்திலாவது முடிவு கட்டப்படவேண்டும். ஆனால் அது நடக்காது. ஏனெனில் இந்த விடயத்தில் ஆளை ஆள் ஏமாற்றிக் கால்வாரும் இந்தக் கட்சிகளின் தலைவர்களுக்குத் தாங்கள் தங்கள் பதவி சுகத்தை அனுபவிப்பதற்கு இப்படி மாறி மாறி குதிரைச் சவாரி விடும் இந்தத் தேர்தல் ஐக்கியம் தேவை. மிக மிக அவசியம். அதனால் மக்கள் மீதான அவர்களின் சவாரி தொடரும்.

தனி வாக்கு வங்கியை வைத்திருக்கும் ஸ்ரீதரன் போன்ற ஒரு சிலர் விதிவிலக்காக இருக்கலாம். ஏனையோருக்கு – கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா உட்பட பலருக்கும் – ஆளையாள் ஏமாற்றிக் காலை வாரும் இந்த மூன்றாம் தர அரசியலும், கூட்டுக் களவாணிப் பண்பியல்பும்தான் ஒரே மார்க்கம் – பதவியை எட்ட. அதனால் இத்தகைய குழிபறிப்புகளோடு கூட்டமைப்பு நாடகம் தொடரவே செய்யும். அது நாய் வால் பண்பியல்பு. அதை நேராக்க முடியாது.

# வடக்குக் கிழக்கில் வாழும் மக்களுக்கு அனைத்து வகை தடுப்பூசிகளும் வழங்குக!

## ஜனாதிபதிக்கு வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் மயூரன் கோரிக்கை



வடக்கு - கிழக்கு மக்களின் எதிர்பார்ப்புக்களின் அடிப்படையில் அனைத்து வகை தடுப்பூசிகளையும் வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென முன்னாள் மாகாண சபை உறுப்பினர் செ.மயூரன் ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

குறித்த கடிதத்தில் செ.மயூரன் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு -

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் வசிக்கும் மக்களின் நன்மை கருதி அனைத்துவகை கொரோனாத் தடுப்பூசிகளையும் இந்தப் பிராந்தியத்துக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குறிப்பாக வடக்கு - கிழக்கில் வசிக்கும் மக்கள் அல்லது இளைஞர்களில் அநேகமானவர்கள், ஐரோப்பா உள்ளிட்ட மேற்கத் தேய நாடுகளுடன் தொடர்புகளைப் பேணுபவர்களாக உள்ளனர்.

குறிப்பாக தொழில் நோக்கத்துக்காகவோ அல்லது பல்வேறு காரணங்களுக்காகவோ வெளிநாடுகளுக்கு செல்லும் நோக்கம் அவர்களிடம் இருக்கின்றது.

எனவே, நாட்டின் தலைவர் என்றவகையில் அதனை நீங்கள் நன்கு அறிந்திருப்பீர்கள் என நம்புகின்றேன்.

மேலும் ஐரோப்பா உள்ளிட்ட மேற்கத் தேய நாடுகளிற்கு செல்லும் இலங்கையைச் சேர்ந்த பயணிகள் பைஸர், அஸ்ட்ராஜெனெகா, மொடேர்னா போன்ற கொரோனாத் தடுப்பூசிகளின் இரண்டு செலுத்துகைகளையும் பெற்றிருக்கவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் வடக்கு கிழக்குப் பகுதியில் இதுவரையான காலப்பகுதியில் சீனா நாட்டால் வழங்கப்பட்ட சினோபோர்ம் தடுப்பூசிகளே அதிகம் ஏற்றப்பட்டு வருகின்றன.

இதனால் வெளிநாடு செல்லும் நோக்கத்துடன் இருக்கும் அநேகமான பொதுமக்கள் சீனநாட்டு தடுப்பூசிகளை செலுத்திக்கொள்ளாத அபாய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலைமை தொடரும் பட்சத்தில் கொரோனாத் தொற்றுப்பரவலடைந்து, உயிரிழப்புக்களும் மென்மேலும் அதிகரிக்கும் அபாயநிலைமை காணப்படுகின்றது.

ஆகவே, இவையைக் கருத்தில் கொண்டு நாட்டின் தலைவர் என்ற வகையில் வடக்கு - கிழக்கு பிராந்தியத்துக்கு பைஸர், அஸ்ட்ராஜெனெகா, ஸ்புட்னிக் வி போன்ற கொரோனாத் தடுப்பூசிகளை மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேனும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். - என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# தனிமைப்படுத்தலை மீறிச் செயற்படுவோருக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்குக!

## பொலிஸ்மா அதிபருக்கு கெஹலிய உத்தரவு

இலங்கையில், தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கை மீறிச் செயற்படுவோருக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு பொலிஸ்மா அதிபருக்கு அறிவித்துள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல கூறியுள்ளார்.

சுகாதார ஆலோசனைகளை பொதுமக்கள் உரியவாறு பேணுவதால், நாட்டில் ஒட்சிசன் தேவைப்படும் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கையில் ஓரளவு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

எனவே, சுகாதார ஒழுங்கு விதிகளைத் தொடர்ந்தும் பின்பற்றும் பட்சத்தில் நாட்டில் கொரோனா தொற்றைக் கட்



டுப்படுத்த முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# பொலிஸாரால் சுடப்பட்ட இலங்கையரை நாடு கடத்துவதற்கு அரசு முயன்றது!

## நியூசிலாந்து பிரதமர் தெரிவிப்பு

நியூசிலாந்தில் மக்கள் மீது தாக்குதலை நடத்திய நிலையில் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்ட பயங்கரவாதியை, நாடு கடத்த நியூசிலாந்து அரசாங்கம் பல வருடங்களாக முயன்றது என நியூசிலாந்து பிரதமர் ஜெசிந்தா ஆர்டெர்ன் தெரிவித்துள்ளார்.

நியூசிலாந்தின் ஒக்லான்டிலுள்ள விற்பனை நிலையமொன்றில் மக்கள் மீது தாக்குதல் நடத்திய பயங்கரவாதி, பொலிஸாரால் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதாவது, 2011 ஆம் ஆண்டு மாணவர் விசாவில் நியூசிலாந்திற்கு வந்து, அகதி அந்தஸ்து கோரினார். ஆனால் அவரது கோரிக்கை ஆரம்பத்தில் நிராகரிக்கப்பட்டது. பின்னர் அகதி அந்தஸ்து டிசெம்பர் 2013 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது என அவர் தெரிவித்துள்ளார்.

ஆனாலும், தனிநபரின் அகதி அந்தஸ்து மோசடியாக பெறப்பட்டதாக கிடைக்கப்பெற்ற தகவல்களை அடுத்து 2016 ஆம் ஆண்டில் அவர் பொலிஸாரின் கண்காணிப்புக்குள் வந்தமையுடன் அவரது அகதி அந்தஸ்து 2019 இல்ரத்து செய்யப்பட்டு நாடு கடத்துவதற்கான முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்டன என நியூசிலாந்து பிரதமர் சுட்டிக்



காட்டியுள்ளார்.

எனினும் அவர் நாடு கடத்தப்படுவதற்கு எதிராக மேல்முறையீடு செய்தார். இந்நிலையில் அகதி அந்தஸ்து வழக்கு தீர்க்கப்படும் வரை அதிகாரிகள் அவரை சிறையில் தடுத்து வைக்க முயன்றனர். ஆனால் அவ்வாறு செய்வதற்கு சட்ட திட்டங்கள் இல்லாதமையால் அது பலனளிக்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். மேலும், ஐ.எஸ்.அடிப்படைவாத கொள்கைகள் கொண்ட இலங்கையர் எனவும் பிரதமர் ஜெசிந்தா ஆர்டெர்ன் தெரிவித்துள்ளார்.

கடந்த 2019 ஆம் ஆண்டு கிரிஸ்ட்சர்ச் துப்பாக்கிச் சூட்டிற்குப் பின்னர் நியூசிலாந்தில் பதிவான பயங்கரமான தீவிரவாதத் தாக்குதலாக இது பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தமிழ் ஊடகத்துறையின் ஜாம்பவான் எஸ்.டி.எஸ்.!

## எஸ்.டி. சிவநாயகம் நினைவுப் பகிர்வு



அங்கம் - 67

ந.வித்தியாதரன்

1985 இற்குப் பின்னர் இதுவரை சுமார் 35 ஆண்டுகளுக்கு மேல் நான் ஊடகப் பணியாற்றிய தளமும் காலமும் சூழலும் வேறு.

ஆசிரியர் சிவநாயகம் ஐயா 1966 க்கு பின்னர் கால் நூற்றாண்டு காலம் பணியாற்றிய களமும் தளமும் வேறு.

உதயன், சஞ்சீவி மற்றும் சுடர்ஒளியிலும், இப்போது காலைக்கதிரிலும் நான் பணியாற்றிய, பணியாற்றுகின்ற நிறுவனக் கட்டமைப்பும் என் பங்களிப்பும் வேறானவை. நானே நிறுவனங்களின் சொந்தக்காரன், உரிமையாளன் என்ற நினைப்போடு பணியாற்றக் கூடிய சுதந்திரத்தையும் உரிமையையும் நான் பணியாற்றிய காலங்களில் எல்லாம் என் நிறுவனங்கள் முழு அளவில் எனக்கு தந்தே இருந்தன.

ஆசிரிய பீடத்தில் நாங்கள் எடுத்த நிலைப்பாடுகளின் மோசமான – மிக மோசமான – விளைவுகளை நிறுவனம் சந்திக்க வேண்டியிருந்தது. சட்டரீதியான நடவடிக்கைகள் என்றால் வேறு. சட்டத்திற்கு மாறான வகையில், மனித உயிரிழப்புகள் வரையான மோசமான பல தாக்குதல்கள் எங்கள் மீது ஏவி விடப்பட்டன. இலக்கு வைத்து கொடூர ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டதில் அலுவலகத்தில் பலரையும் பலவற்றையும் இழந்தோம். அதேபோன்று இலக்கு வைத்து நடத்தப்பட்ட விமானக் குண்டுவீச்சு தாக்குதலில் மனித உயிர்களைக் காவு கொடுத்தோம். அலுவலகத்துக்குள் புகுந்து கண்மண் தெரியாமல் சுட்டுத்தள்ளி ஊழியர்களின் உயிர்களைக் காவு கொண்டார்கள். பெருமளவு சொத்துக்களோடு அலுவலகக் களஞ்சியத்தைத் தீயிட்டு எரித்தார்கள். கொழும்பு அலுவலகத்துக்கு கிரனைட் தாக்குதல் நடத்தி ஊழியரின் உயிரைப் பலி எடுத்தார்கள். பல செய்தியாளர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். பத்திரிகை விநியோகஸ்தர்கள் கொல்லப்பட்டார்கள். கடத்தித் தாக்கி, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலில் வைத்து சித்திரவதை செய்து கொடுமைப் படுத்தினார்கள். இப்படி எமது நிறுவனமும் நாமும் பட்ட கஷ்டங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. அவற்றால் ஏற்பட்ட உயிரிழப்புக்கள், உடல் உபாதைகள், சொத்து இழப்புகள் சொல்லுந்தரமன்று.

இந்த இழப்புக்களின் பெறுபேறுகளை – அவற்றினால் நிறுவனத்துக்கும் ஊழியர்களுக்கும் ஏற்பட்ட பாதிப்புகளை – அதனால் மக்கள் மத்தியில் ஏற்பட்ட பச்சாதாபத்தை – பின்னாளில் பொருத்தமற்ற, பொருத்தமேயற்ற, தகுதியற்ற, உரிமையற்ற நபர்கள் தங்களுக்கு அரசியல் லாபமாகவும், வருமானமீட்டலுக்கான வழியாகவும் பயன்படுத்திக் கொண்டனர் என்பது உண்மைதான்.

ஆனாலும் அந்தக் கொடூரங்கள் அரங்கேறிய காலங்களில் எல்லாம், ஏன் இப்படித் தீவிரமாக எழுதுகிறீர்கள் என்றோ, கொஞ்சம் அடக்கி வாசியுங்கள் என்றோ நிறுவன தலைமையோ, உரிமையோ, எங்களை – ஆசிரிய பீடத்தை – கட்டுப்படுத்தவோ, தடை போடவோ எண்ணவும் இல்லை.

உயிர், உடைமை இழப்புக்களை நிறுவனம் தாங்க முடியாத அளவுக்கு மோசமாக எதிர்கொண்ட போதும் –

அவை யாவும் எமது எழுத்துகளின் விளைவு என்பது வெளிப்படையாகத் தோற்றிய போதிலும் – எங்கள் எழுத்துக்குச் சிறிதளவு தடையோ கட்டுப்பாடோ போடாமல், நாம் விரும்பியவற்றை மேலும் மேலும் தீவிரமாக எழுதும் சூழ்நிலைக்கு நிறுவனமும் நிர்வாகமும் இடம் தந்து நின்றன என்பது யதார்த்தம். அதனால் நாம் வீறு கொண்டு எழுதிய சூழல் வேறு.

ஆனால் சிவநாயகம் ஐயா பணிபுரிந்த கள நிலைமை வேறு. அவர் சொந்தக் கம்பனியில் பணியாற்றவில்லை. அந்த நிறுவனத்தில் பின்னாள்களில் அவரும் ஓர் இயக்குநரானார் என்றாலும் அது குணசேனா அண்ட் கம்பனி குழுமத்தில் அங்கம். சுயாதீனா பத்திரிகைகள் சமாஜம் என்ற சிங்களக் கம்பனியில் அவர் பத்திரிகை ஆசிரியராக இருந்தார். அந்த நிறுவனத்தில் இருந்து வேறு செல்வாக்குப் பெற்ற சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகளும் வெளிவந்து கொண்டிருந்தன. தேசிய இனப் பிரச்சினையை ஒட்டிய விடயங்களை பௌத்த, சிங்களப் பேரினவாத வெறிப்போக்கில் அவை நோக்கிக் கொண்டு இருந்தன.

இவற்றுக்கு மத்தியில்தான் தமது தமிழ்ப் பத்திரிகையை இயலுமானவரை தமிழ் தேசிய உணர்வெழுச்சியுடன் முன் கொண்டு செல்ல வேண்டியவராக அவர் இருந்தார். அதை இயன்ற வரை வெற்றிகரமாகச் சாதித்தாரா என்பதுதான் கேள்வி. நமது மிதவாத அரசியல் தலைமைகள் பொறுப்பின்றிச் செயற்படுகின்றன. நாடாளுமன்றப் பதவிகளுக்காக மக்களை உசுப்பேற்றி அரசியல் செய்கின்றன. இவற்றின் விளைவு மோசமான பாதிப்புகளைத் தரும் என்பதை அவரது பதவி நிலையிலிருந்து வெளிப்படுத்த முடிந்தது. அவர் வெளிப்படுத்தினார்.

ஆனால் தமிழ் இளைஞர்களுக்கு அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்தி, அவர்களைச் சரியான திசையில் வழிநடத்திச் செல்வதற்கான ஒரு பணியை முன்னெடுப்பதற்கான தளமாக அவரின் களச்சூழல் அமையவே இல்லை.

தமிழர்களின் விடுதலைப் போராட்டம் ஆயுத வழிக்குத் திரும்பிய காலகட்டம் அது. அந்த உரிமைப் போராட்ட காலத்தில் அதற்கான பாதையை செப்பனிட்டுக்காட்டி, வழிநடத்துவதற்கான தளத்தில் அவர் இருக்கவில்லை. எனினும், அது – விடுதலைப் போராட்டம் – பிழையான திசையில் நகர்வதைத் தடுப்பதற்கான 'ஸ்பீட் பிரேக்கர்' களை அவரால் போட முடிந்தது.

அவரின் அந்த நேரத்து எழுத்துப்பணியை ஊடுருவிப் பார்ப்பவர்களுக்கு ஒரு விடயம் புரியும். மிதவாதத் தலைவர்களின் உணர்ச்சியூட்டும் நடவடிக்கை கள் உயிரிழப்புகளையும் பாதிப்புகளையும் ஏற்படுத்தப் போகின்றன என்பதை அவர் முன் கூட்டியே தீர்க்கதரிசனத்துடன் எச்சரித்தார் என்பதை புரிந்து கொள்ள முடியும்.

அவர் பணிபுரிந்த சிங்களக் கம்பனியில் இருந்த படி தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டத்தை அவர் நியாயப்படுத்த முடியாது என்பது புரிந்து கொள்ளத்தக்கதே. அதற்காக இளைஞர்களின் ஆயுதப் போராட்டத்திற்கு எதிராக அவர் நிலைப்பாடு எடுத்து, பிரசாரம் செய்தாரா என்று கேட்டால் இல்லை என்று அடித்துச் சொல்ல முடியும்.

எனினும் ஆயுதப் போராட்டம் தொடர்பில் சட்ட ரீதியான அறிவுறுத்தல்களை, நீதிமன்ற உத்தரவுகளை, செய்திகளை அவர் வெளியிட்டார். ஒரு வகையில் அவை ஆயுதப் போராட்டத்திற்கு எதிரான நடவடிக்கைகள் என்று அர்த்தப்படுத்த முடியும் எனினும், அவை பத்திரிகைக்கான சட்ட கடப்பாடுகளுக்குள் சிக்கவைக்கும் கட்டாயத்தை ஏற்படுத்தும் என்பதால் அவர் அப்படி நடக்க வேண்டியிருந்தது. அதுவும் இது விடயத்தில் தமது நிறுவனத்தின் சகோதர ஆங்கில, சிங்களப் பத்திரிகைகளின் சட்டத்துறைச் செய்திகளை பிரசுரிக்க வேண்டிய கடப்பாடு அவருக்கு இருந்தமையால் அதை செய்தார்.

அவர் மனமாரவும் ஆத்மார்த்தமாகவும் தமிழ்ப் போராளிகளை மதித்தார். அவர்களின் உன்னத இலக்குகளை மெச்சினார். அவர்களின் ஈகம், தியாகங்களை கழிவிரக்கத்துடன் நோக்கினார். அதற்காகப் பேனா மூலம் ஒத்துழையுங்கள் என்று எம்மை வழிப்படுத்தித் தூண்டினார்.

ஆனால் அந்த இளைஞர்களை அந்த வழியில் தள்ளி விட்டுவிட்டு – தூண்டி விட்டு விட்டு – அதில் அரசியல் தீக்காயும் மிதவாதத் தலைவர்கள் மீது சாகும்வரை அவரது மனதில் ஆவேசம் கனன்று கொண்டிருந்ததை நான் அறிவேன்.

(வளரும்)





தாக்குதலில் கொல்லப்பட்ட உதயன் ஊழியருக்கு அலுவலகத்தில் இறுதி அஞ்சலி.

காலைக்கதிர் Kalaikkathir

# நியூசிலாந்து அரசாங்கத்திடம் இருந்து நாம் பாடம் கற்றுக்கொள்ள வேண்டும்!

## எரான் விக்கிரமரத்ன 'அட்வைஸ்'



மனித உரிமைகளுக்கு முக்கியத்துவமளித்து ஒன்றிணைந்து இலங்கையை கட்டியெழுப்ப வேண்டும்.

கடந்த வாரம் நியூசிலாந்தில் இடம்பெற்ற சம்பவத்தையடுத்து அந்நாட்டு அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் ஊடாக நாம் பாடத்தைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் கடந்த மார்ச் மாதம் 24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணையில் கடந்த ஒன்றரை வருடங்களில் இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பிலேயே குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே உள்ளக பொறிமுறைகளைப் பயன்படுத்தி மனித உரிமைகள் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் எரான் விக்கிரமரத்ன சுட்டிக்காட்டினார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

# 2 ஆயிரத்து 81 பேர் கொவிட் குணமடைவு

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து மேலும் 2 ஆயிரத்து 81 பேர் குணமடைந்துள்ளனர்.

இதனையடுத்து நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 லட்சத்து 84 ஆயிரத்து 557 ஆக அதிகரித்துள்ளது.

நாட்டில் இதுவரையில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 4 லட்சத்து 59 ஆயிரத்து 459 ஆக பதிவாகியுள்ளது.

மேலும் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 9 ஆயிரத்து 951 ஆக பதிவாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# கிளிநொச்சியில் 2 ஆவது தடுப்பூசி இன்று முதல் செலுத்தப்படும்

## வைத்தியர் நிமால் அருமைநாதன் தெரிவிப்பு

கிளிநொச்சி மாவட்டத்தில் 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான இரண்டாவது தடுப்பூசி செலுத்தும் பணிகள் இன்று (திங்கட்கிழமை) முதல் இடம்பெறவுள்ளன என கிளிநொச்சி பிராந்திய தொற்று நோயியலாளர் வைத்தியர் நிமால் அருமைநாதன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

கிளிநொச்சி மாவட்டத்துக்கு 65 ஆயிரம் தடுப்பூசிகள் கிடைக்கப்பெற்றுள்ளன. குறித்த தடுப்பூசிகளைச் செலுத்துவதற்கு அறிவிக்கப்பட்டுள்ள இடங்களுக்குச் சென்று, காலை ஒன்பது மணி முதல் பிற்பகல் நான்கு மணி வரை மக்கள் பெற்றுக்கொள்ள முடியும்.

அதாவது பொது மக்கள் ஒரிடத்தில் அதிகளவில் ஒன்று கூடுவதைத் தவிர்ப்பதற்காகவே மாவட்டத்தின் பல இடங்களிலும் தடுப்பூசி செலுத்தும் நிலையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. – என அவர் குறிப்பிட்டுள்ளார்.



# இலங்கை – இத்தாலி இடையில் இருதரப்பு உறவு குறித்து பேச்சு

இலங்கைக்கும் இத்தாலிக்குமிடையில் வர்த்தகம், முதலீட்டு உறவுகள், சுற்றுலா மற்றும் மக்களுக்கிடையிலான தொடர்புகளை மேலும் விரிவாக்குவது தொடர்பில் இரு தரப்பு அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இலங்கைக்கான இத்தாலியின் தூதுவர் ரீட்டா கியுலியானா மனெல்லா மற்றும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் ஆகியோருக்கிடையிலான சந்திப்பு அண்மையில் இடம்பெற்றது. இதன்போதே இந்த விடயம் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

அரசியல், பொருளாதார மற்றும் கலாசார உறவுகளை விரிவுபடுத்தும் வகையிலான இலங்கை மற்றும் இத்தாலிக்கு இடையேயான வலுவான, நட்புறவான, பரஸ்பரம் நன்மை பயக்கும் கூட்டாண்மையை அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் பாராட்டினார்.

வர்த்தகம், முதலீட்டு உறவுகள், சுற்றுலா மற்றும் மக்களுக்கிடையிலான தொடர்புகளை மேலும் விரிவாக்குவது தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இரு நாடுகளினதும் பொருளாதார மற்றும் கலாசார செறிவூட்டலுக்கு இத்தாலியில் உள்ள இலங்கைச் சமூகத்தின் நேர்மறையான பங்களிப்பையும், கி.பி. முதலாம் நூற்றாண்டு முதல் இலங்கைக்கும் ரோமுக்கும் இடையே நிலவிய வலுவான இராஜதந்திர உறவுகளின் வரலாற்றையும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இலங்கையின் பிராந்திய மற்றும் பல்தரப்பு ஈடுபாடுகள் தொடர்பாக இத்தாலி தூதுவருக்கு அமைச்சர் விளக்கியமையுடன், பரஸ்பர நலன் சார்ந்த விடயங்களில் நெருக்கமான உரையாடலையும் ஒத்துழைப்பையும் தொடர்வதற்கும் இதன்போது ஒப்புக்கொள்ளப்பட்டது. இந்த சந்திப்பில் வெளிநாட்டு அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகளும் பங்கேற்றனர்.

# கண்டியில் போக்குவரத்து நெரிசலை குறைக்க அரசாங்கம் நடவடிக்கை



கண்டியில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க ஆரம்பிக்கப்பட்ட கெட்டம்பே மேம்பாலத்தின் கட்டுமானத்தை துரிதப்படுத்துமாறு ஆளுங்கட்சியின் பிரதம கொறடாவும் நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கண்டியில் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக ஹங்கேரி குடியரசின் நிதியுதவி பெற்ற கெட்டம்பே மேம்பாலத்தின் கட்டுமானத்தை துரிதப்படுத்துமாறு ஆளுங்கட்சியின் பிரதம கொறடாவும் நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சருமான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ திட்டப் பணிப்பாளர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கியுள்ளார்.

கெட்டம்பேயில் மேம்பாலம் அமையப்பெறுவதால் பேராதனை - கண்டி வீதியில் போக்குவரத்து நெரிசல் குறையும் என்றும் அதே நேரத்தில் 18 வீதிகள் அடையாளம் காணப்பட்டு அகலப்படுத்தப்பட்டு கண்டியில் போக்குவரத்து நெரிசலை போக்க திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன.

கொழும்பு மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகளில் உள்ள முக்கிய வீதிகளில் தற்போது நிலவும் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் நடவடிக்கையாக நெரிசலான பகுதிகளில் மேம்பாலம் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மேலும் தெரிவித்தார்.

# வவுனியா – உலுக்குளம் காட்டு பகுதியில் கசிப்பு தயாரிப்பு நிலையம் முற்றுகை

## ஒருவர் கைது



வவுனியா, உலுக்குளம் காட்டுப் பகுதியில் கசிப்பு உற்பத்தி செய்யும் இடம் ஒன்று நேற்று பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டமையுடன், ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா, உலுக்குளம் காட்டுப் பகுதியில் கசிப்பு உற்பத்தி இடம்பெறுவதாக பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து, செட்டிகுளம் பகுதி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் செனவிரட்ன வீரக்கோன் தலைமையில், உலுக்குளம் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின் போது கசிப்பு தயாரிப்பதற்குப் பயன்படும் நான்கு பெரல்கள், 100 லீற்றர் கோடா, வயர்கள் என்பனவும் பொலிஸாரால் மீட்கப்பட்டதுடன், ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணையின் பின் கைது செய்யப்பட்ட நபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக உலுக்குளம் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

# நியூசிலாந்து தாக்குதல்தாரி தொடர்பில் சி.ஐ.டியினர் விசேட விசாரணை ஆரம்பிப்பு



நியூசிலாந்தின் ஒக்லன்ட் நகரில் உள்ள பல்பொருள் அங்காடி ஒன்றில் தாக்குதல் மேற்கொண்ட இலங்கையர் தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களத்தினர் விசேட விசாரணை ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

குறித்த நபருடன் நெருங்கிய தொடர்பில் இருந்த நபர்களிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புடன் தொடர்பில் இருந்த மொஹமட் சம்சுதீன் ஆதில் எனும் 32 வயதுடைய நபர் கடந்த வெள்ளிக்கிழமை இவ்வாறு தாக்குதல் மேற்கொண்டிருந்தார்.

காத்தான்குடி பகுதியைச் சேர்ந்த குறித்த இளைஞன் 2011 ஆம் ஆண்டு நியூசிலாந்திற்கு சென்றுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘இனப்படுகொலை’, ‘இனச்சுத்திகரிப்பு’ ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

## அங்கம் - 122

### 339.எது நடந்தும், கடைசியில் எல்லோரும் இறக்க வேண்டியதாயிற்றே?

முடிவுகளும் விதிகளும் அப்படியேதான் ஆகின. அதுதான் தலைவிதி, எங்களை மீறியது என ஆறுதல் படுவதா அல்லது இந்த முடிவுகள் நாங்களே தேடிக் கொண்டவையா என்பதுதான் நாம் பார்க்கக் கூடியது. பிரபாகரனும் அவரது முழுக் குடும்பமும் மே 18ஆம் திகதி இறந்தார்கள் அல்லது கொல்லப்பட்டார்கள் என அறிவிக்கப் பட்டது. அந்த தகவல் சில காலங்களுக்கு பிறகு விடுதலைப் புலிகளாலும் ஏற்றுக் கொள்ளப்படவிருந்தது. இடைக் காலத்தில் பிரபாகரன் இறந்தமை கே.பியினாலும் மறுக்கப்பட்டது. தமிழ் நாட்டிலும் பழ.நெடுமாறன் வைகோ போன்றோரும் அந்த நிலைப்பாட்டையே ஆதரித்தனர். இவை கூட விடுதலைப் போராட்டத்தை இனி எப்படி முன்னெடுப்பது, அதற்காகப் பிரபாகரன் உயிருடன் இருக்கிறாரென்றால் தொடர்ந்தும் வரக்கூடிய ஆதரவு என்பதின் அடித்தளங்களில் தங்கி இருந்தன.

சில மாதங்களுக்குப் பிறகு, பிரபாகரனின் இளைய மகன் பாலச்சந்திரன், பாலகனாக இருந்தும் துடி துடிக்கச் சுட்டு கொல்லப்பட்ட படங்கள் வெளிவந்தன. அந்தக் கொடுமைக்குப் பொறுப்பை தவிர்ப்பதற்கு இராணுவத் தளபதி தரத்தில் இருந்த ஒருவர் தான் பாலச்சந்திரன் பிடிக்கப்பட்டதை முன்னைய போராளி கருணாவிற்கு அறிவித்தபோது, அவர் அவன் சிறுவனானாலும் விட்டு வைக்க வேண்டாம், அது வளர்ந்து ஒரு நஞ்சுப் பாம்பாகும், இவையெல்லாவற்றையும் அழித்து விடுங்கள் என்று சொன்னதால் அது நடந்தது என்றார் எனப் பின்னர் அறிந்தேன். பிரபாகரனது உடலை அடையாளம் காட்டியவரும் கருணாதான் என அறிவிக்கப்பட்டது இவை தவிர்க்கப்பட்டிருக்கலாமோ என்ற ஆதங்கம் அடிக்கடி எழுவது உண்டு. அதேசமயத்தில் அது அது, அவரது விதி என்றும் ஆறுதல் படுத்தி கொள்வது உண்டு. என்றாலும் வாழ விரும்பி, தங்களது மழலை செல்வங்கள் இறப்பதை பார்க்கவோ, கேட்கவோ விரும்பாத பாசம் நிறைந்த போராளிகள். அவர்களது இறப்புக்களெல்லாம் தடுக்கப்பட்டிருக்கலாம் என்பது மனத்தை உலுப்பியது. அவர்களோடு இருந்த மழலைகளின் கதி?

### 340.ஏன் அந்த ஆதங்கம்?

நான் 30 ஏப்ரல் 2009இல் வெளிவிவகார அமைச்சுக்கு அனுப்பிய மின் அஞ்சலைத் தொடர்ந்தும் அழுத்தம் கொடுக்க அதேசமயம் வரதகுமார், லண்டனிலிருந்து புலம் பெயர் அமைப்புகளிடையேயும் ஐரோப்பிய சர்வதேச அமைப்புகள் மூலமாகவும் போர் நிறுத்தத்துக்கு அழுத்தம் கொடுத்துக் கொண்டிருந்தார். சுவிஸ் நாட்டு வெளிவிவகார அமைச்சின் உதவியோடு எல்லாக் குழுக்களையும் அங்கு சந்திப்பு நடத்தி ஓர் இணக்கத்திற்கு வந்து ப.சிதம்பரம் இந்திய அரசிற்காக முனைப்பெடுத்த அறிவிப்பை செய்ய முடியுமானால் இந்தியா மூலம் போர் நிறுத்தத்தை கொண்டு வரலாம் என எண்ணினோம். ஒரு காரியசித்திக்காக, அதன் லட்சியத்திற்காக, ஒவ்வொரு வரும் மற்றவரை அணைத்து முன்னேறும் மனோபாவம் அப்பொழுதும் வராமல், போராட்டத்தை எப்படி முன்னெடுப்பது என தலைவருக்குத் தெரியும், அவர் வியூகங்கள் அமைப்பார், நாங்கள் செய்யச் சொன்னவற்றைச் செய்வோம் என்ற அசையாத நம்பிக்கையும், அதற்காக தலையாட்டியமையும், நிஜங்களின் வழிகளைப் பார்க்காமல் மௌனம் காத்ததும், ஒழிந்து திரிந்ததும், சின்னங்களை விட்டுப் பயணிக்க முடியாததும் பெரும் சவாலாக இருந்தன.

ஒருசிறியஉதாரணமாகஎனதுஅனுபவம்ஒன்றையே சொல்லுகிறேன். அந்த நேரங்களில் ஆஸ்திரேலியாவிலும் நானிருந்த மெல்போனிலும் போராட்டங்களும்






ஆர்ப்பாட்டங்களும் ஏற்பாடு செய்யப்பட்டு நடந்து கொண்டிருந்தன. இவற்றில் செயற்பாட்டாளர்களாக ஈடுபட்டிருந்த யாவரையும் அறிந்திருந்தேன். அவர்களது பிணக்குகளையும் தெரிந்திருந்தேன். அதிலும் அவர்களின் அமைப்பாளர் எனது மனைவியின் மூலமாக மிக நெருங்கிய உறவினர். ஆனால் விடுதலையின் கருத்து வேறுபாடுகளால், அன்னியோனியம் குறைவாக இருந்தாலும் இணக்கங்கள் தொடர்ந்தேயிருந்தன. அவர் யோகியின் பள்ளிப் பருவகாலங்களில் சகமாணவன். இருவரும் இணைபிரியாதவர்கள். யோகியும் அவரது தம்பியும் விடுதலைப் புலிகளுடன் இணைந்த நாள் தொட்டு தனிப்பட்ட ரீதியில், பிரபாகரனில் அளவற்ற நம்பிக்கையும், விசுவாசமும் கொண்டிருந்தவர். தலைவரது சொல்லுக்கு மாற்றுக் கருத்து இல்லை என்ற நிலைப்பாடு அவருடையது. அளவற்ற அர்ப்பணிப்புக்கள் செய்தவர். முள்ளிவாய்க்கால் முடிவுகளுக்குப் பின், தலைவரின் மறைவைத் தாங்க முடியாமல் கலங்கி அந்த வேதனையிலேயே மறைந்தவர்.

விடுதலைப் போராட்டமும், தலைவரும் எப்படியோ பாதுகாக்கப்படவேண்டும் என்பதில் துடியாயிருந்தவர். நாங்கள் எடுத்த முனைப்புகள் பற்றி அவருடன் அளவளாவிக் கொண்டிருந்தேன்.

அவர்களின் போராட்டத்தின் ஓர் அலகாக சடுதியாக மூன்று இளைஞர்கள் சாகும் வரை உண்ணாவிரதம் என்ற போராட்டத்தில் இறங்கி, இங்கிருந்த பொதுமக்கள் பூங்காவில் மேடை அமைத்து, திலீபனின் முறையில் தொடங்கினார்கள். அதனை தொடங்கிய மூவரையும் நன்கு அறிவேன். அதேசமயம், அதில் ஒருவர் எனது சகோதரியின் திருமண வழியில் உறவினர். இவற்றால் – இப்படியான உண்ணா விரதங்களால் – ஆஸ்திரேலியா தனது நிலையை மாற்றப்போவதில்லை. அவர்கள் யுத்த நிறுத்தத்துக்கு கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதைதான் தொடர்ந்து வலியுறுத்துவார்கள். அவ்வளவுதான் எனப் புத்தி கூறினேன்.’

“இந்தப் பிள்ளைகள் இப்படி செய்யப் போகிறதே” என என் மனைவிக்குக் கவலையும் ஆதங்கமும். ஏனெனில் அவர்களை அவரும் நன்கு அறிந்திருந்தார். அன்று நாங்கள் எங்களது அபிசேகம் ஒன்றுக்காக கோவிலுக்குப் போன போது, அவர்களுக்காகவும் பூஜை செய்து வீடுதிரும்பும் வழியில் பிரசாதத்தை அவர்களுக்கு அணிவிக்க வேண்டும் என விரும்பினாள். காரை விட்டு இறங்கி, நானும் மனைவியும் பிரசாதத்தோடு அவர்களை அணுகியபோது, அங்கிருந்த உணர்ச்சிக்க சூழலின், எடு பிடியிலும் ஏவுதலிலும் வந்த சிலர் எம்மை மறித்து, தர்க்கித்து எமக்கு அங்கே என்ன அலுவல், போராட்டத்தை நாங்கள் பார்ப்போம், நீங்கள் போகலாம் என்றார்கள். துரதிஷ்ட வசமாக, இதில் வந்தவர் எனது மைத்துனனின் திருமண வழியில் உறவினர். பின்னர் மற்றவர்கள் நிலைமை உணர்ந்து, அவர்களை அடக்கி, எனது மனைவி பிரசாதத்தை அவர்களிடம் கொடுக்க வழி செய்தனர். அதன் பின் நாம் வெளியேறினோம். பழி வாங்கல் எண்ணத்தை விட அரவணைக்கும் மனோபாவம் இங்கும் இருக்கவில்லை. மற்ற புலம்பெயரிலும் காணமுடியவில்லை. மிக சொற்ப நேரத்துக்கிடையில், இது பலவாறாக பெரிதுபடுத்தப்பட்டு அவர்கள் ஊடகங்கள் செய்திகள் வெளியிட்டன. ஆனாலும் மனதிற்கு சரியெனப் பட்டதை செய்து கொண்டு இருந்தோம்.

அதற்குச் சன்மானமாக சற்றே உற்சாகம் தரக்கூடிய பதில் 7 மே 2009இல் வெளிவிவகார அமைச்சில் இருந்து வந்தது.

(வளரும்)



# மெய்நிகர் வகுப்பறை

## Online Classroom 36

ஜனனீ தேவானந்த்
(முதுநிலை விரிவுரையாளர் -
(தகவல் தொழில்நுட்பம்),
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)



(சென்ற வாரத் தொடர்ச்சி)

மெய்நிகர் கல்வியின் 'புதிய இயல்பு' கல்விப்புரட்சியை ஏற்படுத்துகிறது என்பதனைப் பார்த்தோம். பல்வேறு ஆராய்ச்சிகள் மெய்நிகர் கற்கையில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. புதிய பழைய உத்திகளின் வெளிப்பாடுகள் ஆராயப்பட்டுக்கொண்டிருக்கின்றன. இவற்றின் பெறுபேறாக சிறந்த ஒரு மெய்நிகர் வெளி எமக்குக் கிடைக்க இருக்கிறது என்பது எமக்கு மகிழ்ச்சி தரும் ஒரு செய்தியாகும்.

சென்ற தொடரில் ஒரு மெய்நிகர் வகுப்பறைக்கான புதிய உத்திகளின் ஒரு சிலவற்றைப் பார்த்தோம். அதன் தொடராக மேலும் பின்வருவன காணப்படுகின்றன.

### 3. ஆழமான கற்றலுக்கு உதவும் ஆக்மென்டட் ரியாலிட்டி (Augmented Reality – AR)

ஆக்மென்டட் ரியாலிட்டி என்பது ஊடாடும் டிஜிற்றல் கூறுகளை - திகைப்பூட்டும் காட்சி மேலடுக்குகள், சலசலப்பான ஹாப்டிக் பின்னூட்டம் அல்லது பிற உணர்ச்சி கணிப்புகள் -நிஜ உலக சூழலில் கலப்பதாகும்.


ஆக்மென்டட் ரியாலிட்டி (AR) நவீன கற்றல் வழிகளுக்கு ஒரு புதிய முகத்தை அளிக்கிறது. படிப்பது இனி பாடங்களை மனப்பாடம் செய்வதற்கும் புரிந்துகொள்வதற்கும் மட்டுப்படுத்தப்படவில்லை. மாணவர்கள் சூழலில் தங்களை ஆழமாக மூழ்கடிப்பதன் மூலம் கற்றல் பொருளில் ஆழமாக மூழ்கும் வாய்ப்பைப் பெறுகிறார்கள். பாடங்களை புரிந்து கொள்ளும் நிலை முன்பை விட அதிகமாக உள்ளது. ஆக்மென்டட் ரியாலிட்டி மெய்நிகர் கற்பித்தல் மற்றும் கலப்பின கல்வித் திட்டங்களில் மற்ற தொழில்நுட்பங்கள், அம்சங்கள் மற்றும் முறைகளுடன் இணைந்து பயன்படுத்தப்படுகிறது. ஆக்மென்டட் ரியாலிட்டி மாணவர்களுக்கு பாடங்கள் மற்றும் செயல்முறைகளை மிகச்சிறிய விவரங்களில் முழுமையாக பாதுகாப்பான மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட சூழலில் அவதானிக்கவும் படிக்கவும் உதவுகிறது.

இதன் தொழில்நுட்பம் நிஜ உலக சூழல் மற்றும் தரவுகளின் கலவையாகும். ஆக்மென்டட் ரியாலிட்டி செயல்படுத்த சிறந்த வழிகளில் ஒன்று ஸ்மார்ட் போன்களில் பயன்பாடுகள். கற்றல் பொருளை எளிதாகப் புரிந்துகொள்ள ஆசிரியர்கள் 3D மாதிரிகள், வரலாற்றுப் பாடங்கள் போன்றவற்றை முன்வைக்கலாம். பல பயிற்சித் திட்டங்களில், ஆக்மென்டட் ரியாலிட்டி மாணவர்களை ஒரு குறிப்பிட்ட படம் அல்லது உரையை ஸ்கேன் செய்து, ஓடியோ ரெக்கார்டிங், ஆசிரியர் கருத்துகள் அல்லது வீடியோ வடிவில் பாடத்தைப் பற்றிய கூடுதல் தகவல்களைப் பெற அனுமதிக்கிறது. உதாரணத்திற்கு கணிதம் போன்ற சுருக்க தலைப்புகள் மற்றும் தத்துவார்த்த கருத்துக்களை விளக்குவதில் ஒன்லைன் கற்பித்தலில் ஆக்மென்டட் ரியாலிட்டியின் பயன்பாடு பயனுள்ளதாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

### 4. ஸ்மார்ட் கற்றல் : இன்டர்நெட் ஆஃப் திங்ஸ் (Internet of Things (IoT)

ஆன்லைன் கற்பித்தல் மற்றும் கல்வியில் நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதன் மிக வெளிப்படையான நன்மைகளில் ஒன்று இன்டர்நெட் ஆஃப் திங்ஸ் Internet of Things (IoT) . இது இன்றைய ஸ்மார்ட் சாதனங்களுக்கிடையிலான பரந்த இணைப்புகளின் கருத்தை அடிப்படையாகக் கொண்டது. ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் இருவரும் தொடர்பு கொள்ளும் திறன், தகவல் பரிமாற்றம், மற்றும் அவர்கள் நிகழ்நேரத்தில் பயன்படுத்தும் தரவுத்தளத்தை எளிதாக அணுகும் திறன் ஆகியவற்றிலிருந்து பயனடைகிறார்கள். இன்டர்நெட் ஆஃப் திங்ஸ் ஸ்மார்ட் சாதனங்களை உலகின் எந்தப் பகுதியிலிருந்தும் எந்த நேரத்திலும் படிப்பதை எளிதாக்குகிறது. இது மாணவர்களின் ஈடுபாடு மற்றும் ஆர்வத்தின் அளவை அதிகரிக்கிறது. ஸ்மார்ட் கற்றல் சூழல் ஆசிரியர்களுக்கு அதிக கருவிகள் மற்றும் திறன்களை வழங்குகிறது (மொபைல் செயலிகள், மென்பொருள் போன்றவை) தங்கள் மாணவர்களுக்கு மிகவும் திறமையான மற்றும் ஆழமான படிப்பு அனுபவத்தை உருவாக்க உதவுகிறது.

**IoT** யின் மிகப்பெரிய நன்மைகளில் ஒன்று வேகமான மற்றும் திறமையான தரவு சேகரிப்பு. ஆசிரியர்கள் எளிதாகப் பணிகளை உருவாக்கலாம், அவற்றை ஆப்ஸ் மூலம் மாணவர்களுக்கு அனுப்பலாம், மேலும் தரவுகளை சேகரித்து, வரிசைப்படுத்தி, மற்றும் பயன்பாடுகள் மூலம் பகுப்பாய்வு செய்யலாம். இன்டர்நெட் ஆஃப் திங்ஸை பயன்படுத்துவது ஆசிரியர்களுக்கு நிறைய நேரத்தை மிச்சப்படுத்துகிறது மற்றும் கற்பித்தலின் மிகவும் ஆக்கபூர்வமான பகுதியில் கவனம் செலுத்த அனுமதிக்கிறது. இன்டர்நெட் ஆஃப் திங்ஸ் வழங்கிய கருவிகள் பாடசாலைக்கு வெளியே திறமையான படிப்பு, சிறப்பு கல்வி மற்றும் பலவற்றிற்கு சிறந்ததாகும்.



### 5. மெய்நிகர் கற்பித்தலில் செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligent - AI)

செயற்கை நுண்ணறிவு, 'இது அறிவார்ந்த இயந்திரங்கள், குறிப்பாக புத்திசாலித்தனமான கணினி நிரல்களை உருவாக்குவதற்கான அறிவியல் மற்றும் பொறியியல் ஆகும். இது மனித நுண்ணறிவைப் புரிந்துகொள்ள கணினிகளைப் பயன்படுத்துவதற்கான ஒத்த பணியுடன் தொடர்புடையது,

இந்த செயற்கை நுண்ணறிவின் வருகை கல்வியில் ஒரு உண்மையான புதிய மாற்றத்திற்கான ஒன்றாக விளங்குகிறது. இந்த மென்பொருளின் வளர்ச்சி ஒவ்வொரு மாணவருக்கும் மிகவும் தனிப்பட்ட கற்றல் அனுபவத்தை உருவாக்குகிறது. இது ஒரு மாணவரின் ஆர்வங்கள் மற்றும் கற்றல் முறையுடன் தொடர்புடைய ஊடாடும் அம்சங்களுடன் தேவையான தகவல்களுக்கு எளிதான அணுகலை வழங்குகிறது. ஒருவருக்கொருவர் மெய்நிகர் வகுப்பில் கற்பிப்பதற்கும், மிகவும் பயனுள்ள சுய - வேக படிப்பு அனுபவத்திற்கும் இது ஒரு பெரிய ஆற்றலை வழங்குகின்றது.

தொழில்நுட்பத்தின் முன்னேற்றங்கள் மாணவர்களுக்கு ஒரு தனித்துவமான கற்றல் நடத்தையை வழங்குகின்றன. **AI** மென்பொருளில் உள்ள சில திறன்கள் மாணவர்கள் படம் மற்றும் குரல் உள்ளீடு இரண்டின் மூலம் கேள்விகளைக் கேட்கவும் உடனடி மற்றும் துல்லியமான பதில்களைப் பெறவும் உதவுகின்றன. மாணவர்கள் தங்களுக்கு மிகவும் விருப்பமான கற்றல் முறைகளைப் பயன்படுத்த விரல் நுனியில் பல கருவிகளைக் கொண்டுள்ளனர், மேலும் பாடங்களை மைக்ரோ பாடங்களாக உடைத்துக் கற்க இது உதவுகிறது.



மெய்நிகர் கற்பித்தலில் செயற்கை நுண்ணறிவின் நன்மைகள் என்ன? என்று பார்த்தால் மாணவர்களின் முன்னேற்றத்தைக் கண்காணிக்கவும், தேவைப்படும்போது உதவி மற்றும் ஆதரவை வழங்கவும் ஆசிரியர்களுக்கு இந்த நவீன மென்பொருள் உதவுகிறது. சிறந்த முடிவுகளை அடைய மாணவர்களின் விருப்பங்கள் மற்றும் ஆர்வங்களுக்கு ஏற்ப கற்றல் பொருளை மாற்றியமைக்க ஆசிரியர்கள் தங்கள் பாடங்களையும் முறைகளையும் சரிசெய்ய வாய்ப்பேற்படுகின்றது.

செயற்கை நுண்ணறிவு வசதியில் ஆசிரியர்கள் கற்றல் செயல்முறையின் ஆரம்பக் கட்டங்களில் பிரச்சினைகளை தீர்க்க முடியும் மற்றும் ஒவ்வொரு மாணவரின் தனிப்பட்ட தேவைகளுக்கு ஏற்ப மாற்றங்களைச் செய்யலாம். ஒன்லைன் கற்பித்தலில் செயற்கை நுண்ணறிவின் ஒருங்கிணைப்பின் குறிக்கோள்களில் ஒன்று ஆசிரியர்களுக்கான நிர்வாகப் பணியின் அளவைக் குறைப்பதாகும். மதிப்பீடுகள் போன்றவற்றில் பல மணிநேரம் செலவழிப்பதற்குப் பதிலாக மாணவர்களுக்கான தனிப்பயனாக்கப்பட்ட கற்றல் அனுபவத்தை உருவாக்குவதில் கவனம் செலுத்த ஆசிரியர்களுக்கு அதிக நேரமும் வளமும் இதில் கிடைக்கிறது.

கல்வியில் செயற்கை நுண்ணறிவின் வலுவான நன்மைகளில் ஒன்று தனிப்பயனாக்கப்பட்ட கற்றலின் அதிகரிப்பு ஆகும். நான் கொடுக்கக்கூடிய சிறந்த உதாரணம் நெட்ஃபிக்ஸ் செயல்படும் விதம். பயனரின் குறிப்பிட்ட விருப்பத்தேர்வுகள், ஆர்வங்கள் மற்றும் தேர்வுகள் மிகவும் நிறைவான பயனர் அனுபவத்திற்கான தனித்துவமான பரிந்துரைகளின் கலவையை உருவாக்குகின்றன. மாணவர்கள் பல்வேறு தலைப்புகளில் தங்களுக்குத் தேவையான தகவல்களை எளிதாக அணுகலாம். பரிந்துரைகள் அவர்களின் விருப்பமான கற்றல் முறையை அடிப்படையாகக் கொண்டவை - வீடியோக்கள், உரை, ஓடியோ போன்றவை இதில் அடங்கும்.



ஆக, மெய்நிகர் கல்வியில் புதிய தொழில்நுட்பங்கள் கற்றல் நேரம் மற்றும் இடத்தின் வரம்புகளை உடைக்கின்றன. இன்று, மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் இருவருமே தமக்கான தனிப்பட்ட படிப்புச் சூழலை உருவாக்க அதிக வாய்ப்புகளைப் பெற்றுள்ளனர். கல்வியில் ஆட்டோமேசன் குறிப்புகள் எடுப்பது, மதிப்பீடுகளை நடத்துதல், தரவுத்தளங்களை உருவாக்குதல் போன்ற சாதாரணப் பணிகளில் நேரத்தையும் முயற்சியையும் மிச்சப்படுத்துகிறது மற்றும் ஒவ்வொரு மாணவருக்கும் கற்றலை மிகவும் சுவாரஸ்யமானதாகவும், பயனுள்ளதாகவும் உருவாக்கி ஈடுபடுவதிலும் கவனம் செலுத்த கல்வியாளர்களுக்கு அதிக வாய்ப்புகளை புதிய தொழில்நுட்பங்கள் வழங்குகின்றன.

# ரஷ்யா மற்றும் உக்ரைனுடன் சுற்றுலா மேம்பாட்டு முயற்சி

சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்கான அரசாங்கத்தின் திட்டத்தின் கீழ் ரஷ்யா மற்றும் உக்ரைனுடன் இலங்கை சுற்றுலா மேம்பாட்டு முயற்சிகளை ஆரம்பித்துள்ளதாக சுற்றுலாத் துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

சமீபத்திய காலங்களில் அதிக சுற்றுலாப் பயணிகள் வருகை தரும் முதல் 10 நாடுகளில் ரஷ்யாவும் உக்ரைனும் உள்ளன என்றும் அமைச்சர் கூறினார்.

தொற்றுநோய்களின் போது, நாட்டுக்கு உக்ரைன் மற்றும் கஜகஸ்தானுடன் சுற்றுலாப் பயணிகளை அழைத்து வரும் திட்டத்தை இலங்கை செயல்படுத்தியது. அதன்படி கடந்த காலங்களில் 24 ஆயிரத்து 320 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளனர்.

அவர்களில் 250 சுற்றுலாப் பயணிகள் கொவிட் - 19 தொற்றால் பாதிக்கப்பட்டிருந்தனர். வைரஸால் பாதிக்கப்பட்ட சுமார் 150 பேர் முழுமையாகக் குணமடைந்த பின்னர் தங்கள் நாடு திரும்பியுள்ளனர்.

இன்னும் சுமார் 100 சுற்றுலாப் பயணிகள் நாட்டில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை நவம்பர் 4 ஆம் திகதி முதல் இலங்கைக்கும் ரஷ்யாவுக்கும் இடையில் நேரடி விமான சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

அதனால் நவம்பர் 4 இற்குப் பிறகு ரஷ்ய சுற்றுலாப் பயணிகளின் வருகை மேலும் அதிகரிக்கும் என்றும் அமைச்சர் கூறினார்.

# இலங்கைக்கு 150 தொன் ஒட்சிசன் இந்தியாவிலிருந்து கிடைத்துள்ளது

இந்தியாவின் 'லைவ் லைன்' திட்டத்தின் கீழ் இலங்கைக்கு மேலும் 150 தொன் ஒட்சிசன் வழங்கப்பட்டுள்ளதாக இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்திய தூதரகம் தனது டுவிட்டர் பதிவிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளது.

குறித்த ஒட்சிசன் அடங்கிய கொள்கலன்கள், விசாகப்பட்டினம் மற்றும் சென்னையிலிருந்து ஒரு கப்பல் ஊடாக கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளதாக இந்திய தூதரகம் உறுதிப்படுத்தியுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தனிப்பட்ட கோரிக்கைக்கு அமைய, இந்திய அரசு கடந்த மாதத்தின் நடுப்பகுதியில் இருந்து இலங்கைக்கு அவசர ஒட்சிசன் பொருள்களை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# 6 கோடியே 80 லட்சம் ரூபா பெறுமதியான கேரள கஞ்சா வெற்றிலைக்கேணியில் மீட்பு



வெற்றிலைக்கேணி, ஆளியவளை கடற்பரப்பில் இலங்கை கடற்படையினர் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை மேற்கொண்ட சிறப்பு நடவடிக்கையில் சுமார் 277 கிலோ மற்றும் 400 கிராம் எடையுள்ள கேரள கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

ஆளியவளை கடல் பகுதியில் இருந்து சந்தேகத்திற்கிடமான டிங்கி படகு ஒன்று கரையை நோக்கி சென்றதை கண்டு, வடக்கு கடற்படையினர் இந்த சிறப்பு நடவடிக்கையை நேற்று காலை மேற்கொண்டனர்.

இதன்போது குறித்த டிங்கி படகில் 05 சாக்குகளில் இந்த கேரள கஞ்சா அளவுகள் கைவிடப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளதுடன் இவற்றின் மொத்த பெறுமதி 6.8 கோடி ரூபா எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

கடற்படையினரின் இந்த விசேட நடவடிக்கை கொவிட் - 19 தடுப்பு நெறிமுறைகளுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்டதுடன், கைப்பற்றப்பட்ட கஞ்சா தொகை தீ வைத்து அழிக்கப்பட்டது.

இதேவேளை கற்பிட்டி பகுதியில் நேற்று காலை கடற்படையினர் நடத்திய மற்றொரு சிறப்பு நடவடிக்கையில் சுமார் 1,026 கிலோ கிராம் உலர்ந்த மஞ்சள் மீட்கப்பட்டுள்ளது.

இதன்போது நான்கு சந்தேக நபர்களை கடற்படையினர் கைது செய்தமையுடன், கடத்தலுக்கு பயன்படுத்திய டிங்கு படகையும் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 29 முதல் 41 வயதுக்கு உட்பட்ட கற்பிட்டி பகுதியில் வசிப்பவர்கள் என அடையாளம் காணப்பட்டனர். சந்தேகநபர்கள், கைப்பற்றப்பட்ட உலர்ந்த மஞ்சள் மற்றும் டிங்கி படகு ஆகியவை சுங்க அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(இன்னுமொரு செய்தி 10ஆம் பக்கத்தில்)

# கொரோனாவினால் உயிரிழப்பவர்களை அடக்கம் செய்ய மேலும் இரு இடங்கள்

கொரோனா வைரஸ் தொற்றுக்குஉள்ளாகி உயிரிழப்போரின் சடலங்களை அடக்கம் செய்ய மேலும் இரண்டு பகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

அதற்கமைய திருகோணமலை மற்றும் புத்தளம் ஆகிய பகுதிகளில் இந்த இடங்கள் தொடர்பாக அறியக் கிடைத்துள்ளன என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

எனினும் அந்த காணிகளைப் பயன்படுத்துவதற்கான இறுதி அனுமதி இது வரை கிடைக்கவில்லை என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களில் இரண்டாயிரத்து 522 பேரின் சடலங்கள் மட்டக்களப்பு - ஓட்டமாவடி பகுதியில் அடக்கம் செய்யப்பட்டுள்ளன.

ஓட்டமாவடி மயானத்தில் மேலும் 300 சடலங்களைப் புதைப்பதற்கான காணி மாத்திரமே காணப்படுவதாக சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.



25

வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசாமி கோவில் வருடாந்த உற்சவத்தையொட்டி 'காலைக்கதிர்' நடாத்தும்

# மாபெரும் சைவ சமய அறிவுப் போட்டி - 2021

## போட்டி விதிகள்

1. இந்தப் போட்டியில் ஆர்வமுடைய அனைவரும் பங்குபற்ற முடியும்.
2. 13.08.2021 முதல் எதிர்வரும் 06.09.2021 வரை காலைக்கதிரில் தினமும் வெளியாகும் கேள்விகளுக்குச் சரியான விடைகளை இதே தாளில் எழுதி, கூப்பனிலுள்ள விவரங்களை நிரப்பி அனுப்புவதன் மூலம் போட்டியினுள் நுழையலாம்.
3. சரியான விடைகளை எழுதி அனுப்புவர்களில் இருந்து தினமும் குலுக்கல் முறை மூலம் அந்த நாளுக்குரிய வெற்றியாளர் தெரிவு செய்யப்படுவார். அத்துடன் முழு நாள்களிலும் சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று பேருக்கும் பணப் பரிசில்கள் உண்டு

## பரிசு விவரம் :

**முழுப் போட்டிக்குமான முதலாம் இடம் - ரூபா 7,000.00**
**இரண்டாம் இடம் - ரூபா 5,000.00**
**மூன்றாம் இடம் - ரூபா 3,000.00**
**தினசரி வெற்றியாளர்கள் ஒவ்வொருவருக்கும் தலா - ரூபா 1,000.00**

4. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் அனுப்பலாம்.
5. பரிசுக்குரியவர்கள் எதிர்வரும் 12.09.2021 அன்று காலைக்கதிர் பத்திரிகை மூலம் அறிவிக்கப்படுவார்கள்.
6. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானதாகும்.

**1. திரு நல்லைத்திருவூஞ்சலை இயற்றியவர் யார்?**

..............................................................................

**2. நல்லூர் ஆலயத்தின் தற்போதைய தேர் எத்தனையாம் ஆண்டு வெள்ளோட்டம் கண்டது?**

..............................................................................

**3. வேதங்களை நான்காக வகுத்துத் தொகுத்தவர் யார்?**

..............................................................................

**4. திருவெம்பாவையின் இறுதி நாள் உற்சவம் எது?**

..............................................................................

**5. நல்லூரில் மஞ்சத் திருவிழா எத்தனையாம் நாள் இடம் பெறும்?**

..............................................................................

**சரியான பதில்கள், கூப்பன்களுடன் இணைக்கப்பட்டு தபால் மூலமாகவோ, நேரடியாகவோ கிடைக்கக் கூடியவாறு எதிர்வரும் 10.09.2021 இற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.**

**காலைக்கதிர் - பசுமை ஊடக இல்லம்**
**30, கல்லூரி வீதி,**
**யாழ்ப்பாணம்**

25

பங்குபற்றுபவர்களின் விவரங்கள்:-

1. முழுப் பெயர் : ----------------------------------------
2. பிறந்த திகதி : ----------------------------------------
3. கல்வி கற்கும் தரம் : ----------------------------------------
4. பாடசாலை : ----------------------------------------
5. முகவரி : ----------------------------------------

..............................................
கையொப்பம்

காலைக்கதிர் Kalaikkathir

# ஒவ்வொரு தனிப்பட்ட குடும்பத்தின் வாழ்வாதாரத்தையும் உயர்த்தும் வகையில் வரவு - செலவுத் திட்டம் அமையும்

## வியாழேந்திரன் திட்டவட்டம்



எதிர்வரும் 2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் ஒவ்வொரு தனிப்பட்ட குடும்பத்தின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கிலேயே அமையப்பெறவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு வேலைத்திட்டத்தின் கீழ் ஐந்தாயிரம் கிராமிய பாலங்களை அமைக்கும் 'இதயங்களை ஒன்றிணைக்கும் ஊரின் பாலம்' வேலைத்திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு பட்டிப்பளை அம்பிளாந்துறை பகுதியில் நிர்மாணிக்கப்படவுள்ள பாலத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற போது பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கிராமத்தில் வாழும் மக்கள், தமது உற்பத்திப் பொருள்களை இலகுவில் நகர்ப்பகுதிகளுக்கு கொண்டுசென்று சந்தைப்படுத்தவும் மக்கள் எதிர்கொள்ளும் போக்குவரத்துப் பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையிலும் இந்தக் கிராமிய பாலங்கள் அமைக்கும் பணிகளை ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கத்தின் வேலைத் திட்டத்தின் அடிப்படையில், பிரதமரின் தலைமையில், இந்தப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தின் பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட நாகமுனை பகுதியில் உள்ள பாலத்தின் புணரமைப்புப் பணிகளே ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

சுமார் 35 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள மேற்படி பாலத்தின் நிர்மாணப் பணிகளைப் பின்தங்கிய கிராம பிரதேச அபிவிருத்தி, வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறுபொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பாலத்துக்கான அடிக்கல்லினையும் நாட்டி வைத்தார்.

இந்த நிகழ்வில், பட்டிப்பளை பிரதேச சபையின் தவிசாளர் நா.புஸ்பலிங்கம், பிரதேச சபை உறுப்பினர் வை.சந்திரமோகன் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களான த.மனோகரன், பா.மதனராஜ் இராஜாங்க அமைச்சரின் இணைப்புச் செயலாளர்கள், ஏனைய திணைக்களங்களின் அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது இராஜாங்க அமைச்சர் அங்கு மேலும் உரையாற்றுகையில் -

மண்முனை தென்மேற்கு பட்டிப்பளை பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் குடிதண்ணீர் பிரச்சினை பாரிய தொரு பிரச்சினையாக இருந்து வந்துள்ளது இதற்கான தீர்வைப் பெற்றுக்கொடுக்கும் வகையில் 35 கோடி ரூபா முதற்கட்டமாக ஒதுக்கியுள்ளதாகவும் படுவாங்கரை மக்களின் நலன்கருதி நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் பிரதான காரியாலயம் ஒன்றையும் கொக்கட்டிச்சோலையில் அமைப்பதற்குமான நிதிகளை ஒதுக்கியுள்ளதாகவும் தெரிவித்தார்.

அதேவேளை பாரிய சவால்களுக்கு முகம்கொடுத்தே இந்த அரசாங்கம் பயணித்துக்கொண்டிருக்கின்றது.

இவ்வாறான சூழலிலும் மக்களது போக்குவரத்தை இலகுபடுத்தும் நோக்கில் அம்பிளாந்துறை மற்றும் மண்டூர் ஆகிய நீர்வழி பிரயாணத்துக்காகப் பயன்படுத்தப்படும் படகு பாதை பழுதடைந்துள்ளமையால் புதிய இரண்டு பாதைகளை பெற்றுக்கொடுத்துள்ளேன்.

அத்தோடு கண்ணுக்குத் தெரியாத நோய் கிருமிகளுடன் நாம் போராடிக் கொண்டு இருக்கின்றோம் எம்மை நாமே பாதுகாத்துக்கொள்வதற்கான பாதுகாப்பு வழிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும், நாம் ஓர் அபிவிருத்தியடைந்துவரும் நாடு என்பதால் மிகுந்த அவதானத்துடனே செயற்படவேண்டும்.

விவசாயத்துறை சார்ந்து எமது மட்டக்களப்பு மாவட்டம் 4 ஆவது இடத்தில் இருக்கின்றது.

எமக்கு இருக்கும் பிரச்சினை எமது மாவட்டத்தில் அதிகளவு குளங்கள் இருந்த போதிலும் அவை புனரமைக்கப்படாத நிலையிலேயே காணப்படுகின்றன. நாம் இந்த அரசாங்கத்தின் ஊடாக குளங்கள் பலவற்றை புனரமைப்பு செய்துவருகின்றோம். குளங்கள் அனைத்தும் புனரமைக்கப்பட்டால் சிறந்த முறையில் நீர் முகாமைத்துவம் செய்ய முடியும், இதனூடாக 3 போகமும் வேளாண்மை செய்ய வாய்ப்பேற்படும். அவ்வாறான சூழ்நிலை ஏற்படும் பட்சத்தில் எமது மாவட்டம் விவசாயத்தில் முதலிடத்தை அடையும், அதற்கான அனைத்துவிதமான வேலைத் திட்டங்களையும் நாம் முன்னெடுத்து வருகின்றோம். - என்றார்.

இதனைத் தொடர்ந்து அம்பிளாந்துறை படகுப் பாதையை பார்வையிட்ட இராஜாங்க அமைச்சர் தாந்தாமலை பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட ஒரு கிலோ மீற்றர் கொங்கிறீட் வீதியினையும் மக்கள் பாவனைக்காக திறந்துவைத்தார்.

# ஆயிரம் கிலோ உலர்ந்த மஞ்சள் புத்தளத்தில் மீட்பு; 4 பேர் கைது





புத்தளம், கற்பிட்டி ஏத்தாளைப் பகுதியில் மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாக கூறப்படும் 1,026 கிலோ கிராம் உலர்ந்த மஞ்சள் கைப்பற்றப்பட்டுள்ளது என கடற்படையினர் தெரிவித்தனர்.

அத்துடன், இந்த சுற்றிவளைப்பின் போது நான்கு பேர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

வடமேற்கு கடற்படை கட்டளையின் விஜய கடற்படையினர் கற்பிட்டி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஏத்தாளை பிரதேசத்தில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) மேற்கொண்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போதே குறித்த உலர்ந்த மஞ்சள் பொதிகள் மீட்கப்பட்டுள்ளன.

மேற்படி பகுதியிலுள்ள கடற்பிரதேசத்தில் சந்தேகத்துக்கிடமான இரண்டு படகுகளை பரிசோதனை செய்தனர். இதன்போது, குறித்த இரண்டு படகுகளிலும் மிகவும் சூட்சுமமான முறையில் 31 உரமூடைகளில் பொதி செய்யப்பட்ட 1,026 கிலோ கிராம் உலர்ந்த மஞ்சள் கொண்டுவரப்பட்டதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

இதன்போது குறித்த இரு படகுகளில் இருந்தும் நால்வர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டமையுடன், அவர்கள் பயணித்த இரண்டு டிங்கி படகுகளையும் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 29 - 41 வயதுக் கிடைப்பட்டவர்கள் எனவும் இவர்கள் கற்பிட்டி பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் கடற்படையினர் குறிப்பிட்டனர்.

உள்ளூர் பகுதிகளுக்கு விற்பனைக்காக கொண்டு செல்லும் நோக்கில் இந்த உலர்ந்த மஞ்சள் சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டுவரப்பட்டிருக்கலாம் என தாம் சந்தேகிக்கிறோம் என கடற்படையினர் தெரிவித்தனர்.

இவ்வாறு ஏத்தாளை பகுதியிலிருந்து மீட்கப்பட்ட உலர்ந்த மஞ்சள் சுகாதார வழிகாட்டுதலுக்கு அமைய கொரோனாத் தொற்று நீக்கி தெளிக்கப்பட்டுள்ளதுடன், கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களும், அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட உலர்ந்த மஞ்சள் மற்றும் டிங்கி படகுகள் என்பனவும் மேலதிக விசாரணைகளுக்காக சின்னப்பாடு சுங்க அலுவலகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கடற்படையினர் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை, கற்பிட்டி பிரதேசத்தில் கடந்த ஐந்து நாள்களில் மட்டும் 3 ஆயிரத்து 4 கிலா கிராம் உலர்ந்த மஞ்சள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், எட்டு பேர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 17 ஆம் திகதி கற்பிட்டி கிளித்தீவு பகுதியில் 370 கிலோ கிராம் உலர்ந்த மஞ்சளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளமையுடன், 19 ஆம் திகதி இப்பந்தீவு பகுதியில் 650 கிலோ கிராம் உலர்ந்த மஞ்சளுடன் மூவரும் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், கடந்த 22ஆம் திகதி இப்பந்தீவு பகுதியில் 500 கிலோ கிராம் உலர்ந்த மஞ்சளும், 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதே பகுதியில் 458 கிலோ கிராம் உலர்ந்த மஞ்சளும் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், நேற்று ஞாயிற்றுக்கிழமை ஏத்தாளை பகுதியில் 1,026 கிலோ கிராம் உலர்ந்த மஞ்சள் கைப்பற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அனுமதி வழங்காத போதிலும் கோதுமை மா விலை எகிறியது

கோதுமையின் விலையை அதிகரிப்பதற்கு நுகர்வோர் அதிகார சபை அனுமதி வழங்காத போதும் பிறிமா நிறுவனம் கோதுமை மா விற்பனை விலையை 12 ரூபாவால் அதிகரித்துள்ளது.

சீனிப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வேளையில் கோதுமை மா பதுக்கப்பட்டுள்ளன. இந்த விடயம் தொடர்பில் நுகர்வோர் அதிகார சபை உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க நுகர்வோர் அதிகார சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாக்கும் அமைப்பின் தலைவர் ரஞ்சித் விதானகே தெரிவித்தார்.

இதேவேளை உலக சந்தையில் கோதுமையின் விலை அதிகரித்துள்ளதாலும், இறக்குமதிக்கான செலவு அதிகரித்துள்ளமையாலும் கோதுமை மாவின் விற்பனை விலையை அதிகரிக்க அனுமதி வழுங்குமாறு பிறிமா நிறுவனத்தினர் வர்த்தகத்துறை அமைச்சிடம் பேச்சு முன்னெடுத்தனர்.

விலை அதிகரிப்பிற்கு இதுவரையில் அனுமதி வழுங்கப்படவில்லை. இருப்பினும் கோதுமை மா விற்பனை விலை அதிகரிப்பதற்கான சாத்தியம் அதிகளவில் காணப்படுகிறது என வர்த்தகத்துறை அமைச்சு குறிப்பிட்டது.

இதற்கமைய 87 ரூபாவிற்கு விற்கப்பட வேண்டிய ஒரு கிலோகிராம் கோதுமை தற்போது 99 ரூபாவிற்கு விற்கப்படுகிறது. 12 ரூபா தன்னிச்சையான முறையில் அதிகரிக்கப்பட்டுள்ளன. கோதுமை மாவின் விலை தொடர்ச்சியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

கொவிட் தாக்கத்தால் நாட்டு மக்கள் பொருளாதார ரீதியில் பெரும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அத்தியாவசிய பொருள்களின் விலையை இறக்குமதி நிறுவனத்தினர் தன்னிச்சையான முறையில் அதிகரிக்கின்றமை வெறுக்கத்தக்க செயற்பாடாகவே கருத வேண்டும் என நுகர்வோர் உரிமைகளை பாதுகாக்கும் அமைப்பின் தலைவர் குறிப்பிட்டார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.09.2021 இல் வெளியிடப்பெற்றது.

# ஜெனிவா அறிக்கைக் குழப்பம்:

# தமிழரசு எம்.பிக்கள் கூட்டாக விளக்குவர்

## அரசியல் உயர் குழு நேற்று காலையில் அவசரமாகக் கூடி ஆராய்ந்து தீர்மானம்

**யாழ்ப்பாணம், செப்டெம்பர் 06**

**ஜெனிவாவுக்கு அறிக்கை அனுப் பும் விடயத்தை ஒட்டி தமிழ் கூட்டமைப்புக்குள் பிளவு ஏற்பட்டிருக்கும் நிலையில், உண்மையில் நடந்தது என்ன என்ற விவகாரத்தை தமிழரசுக் கட்சியின் எம்.பிக்கள் ஒன்றுகூடி தமிழ் மக்களுக்கு விளக்க வேண்டும் என்று இலங்கை தமிழரசுக் கட்சி அவசர அவசர மாக முடிவு எடுத்திருக்கிறது.**

ஜெனிவாவில் நடைபெறவிருக்கும் ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடருக்குத் தமிழ் மக்களின் சார்பில் அவர்களின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தும் அறிக்கையை அனுப்பும் விடயத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பிரதான பங்காளிக் கட்சியான இலங்கை தமிழரசுக் கட்சியை ஓரங்கட்டி, மற்றைய இரண்டு பங்காளிக் கட்சிகளான ரெலோ, புளொட் ஆகியவை கூட்டமைப்புக்கு வெளியிலுள்ள தமிழ்க் கட்சிகளுடன் ஓரணியில் கைகோர்த்து அதிரடி நடவடிக்கை எடுத்திருக்கின்ற பின்னணியில், கூட்டமைப்பு பிளவுபட்டிருப்பது அம்பலமாகி உள்ளது.

இந்தப் பின்புலத்தில் நடந்த விடயங்களை இலங்கை தமிழரசுக் கட்சியி எம்.பிக்கள் அறுவரும் இன்று ஒன்று கூடி, இது விடயத்தில் உண்மையில் நடந்தவை என்ன என்பதை தமிழ் மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும் என தமிழரசுக் கட்சியின் அரசியல்குழு தீர்மானித்திருக்கின்றது.

நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் கூட்டணி, சுரேஷ் பிறேமச்சந்திரனின் ஈ.பி.ஆர்.எல்.எவ்., சட்டத்தரணி சிறிகாந்தாவின் தமிழ்த் தேசியக் கட்சி ஆகியவற்றுடன் சேர்ந்து ரெலொ, புளொட் ஆகியவற்றின் தலைவர்களும், எம்.பிக்களும் ஒப்பமிட்டுத் தனியாக அறிக்கை ஒன்றை நேற்றுமுன்தினம் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு அனுப்பி வைத்தனர் என்று செய்தி அதிரடியாக வெளியானமை தெரிந்ததே.

தமிழர்களின் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த இந்த விவகாரத்தில் கூட்டமைப்பின் ஐக்கியத்தை உடைத்து, ரெலோவின் முன்னெடுப்பில் மேற்கொள்ளப்பட்ட இந்த சதித்திட்டத்தில் புளொட்டும் பங்கு கொண்டிருப்பதாக இலங்கை தமிழரசுக் கட்சியின் மூத்த, முக்கிய தலைவர்கள் கருதுகின்றனர்.

இந்தப் பின்புலத்தில் குறுகிய ஓரிரு மணிநேர முன்னறிவித்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு நேற்று காலை 10 மணி முதல் இரண்டு மணி நேரம் அவசரஅவசரமாக மெய்நிகர் முறையில் கூடியது.

கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சி.வீ.கே.சிவஞானம், செல்வராஜா, மருத்துவர் சத்தியலிங்கம், சுமந்திரன், ஸ்ரீதரன், குலநாயகம், கலையரசன், துரைராஜசிங்கம் ஆகிய ஒன்பது பேர் பங்கு பற்றினர். இரா.சம்பந்தனும் சட்டத் தரணி கே.வி.தவராசாவும் கலந்து கொள்ளவில்லை. நடந்த விடயங்கள் குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. கூட்டத்தில் பங்கேற்ற பலரும் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜாவின் செயற்பாடுகள் குறித்து குறை கூறினர் என அறிய வந்தது.

உண்மையில் நடந்தவை என்ன வென்பதை தமிழரசுக் கட்சியின் எம். பிக்கள் இன்று கொழும்பில் ஒன்று கூடி ஆராய்ந்து, எழுத்து வடிவத்தில் மக்களுக்கு உண்மையைத் தெளிவுபடுத்த வேண்டும் என்று முடிவு செய்தனர் என அறிய வந்தது

---

### ஜோர்ஜ் மாஸ்டர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இருதய தாக்கப் பாதிப்புக்குள்ளாகிக் காலமானார்.

விடுதலைப் புலிகளின் காலத்தில் சமாதானப் பேச்சுக்களின் போதும் பிற சந்திப்புகளின் போதும் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வனின் மொழிபெயர்ப்பாளராக பணியாற்றியவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

யுத்தத்தின் முடிவில் தயா மாஸ்டரோடு கைது செய்யப்பட்டிருந்த அவர் பின்னர் விடுவிக்கப்பட்டிருந்தார்.

---

### இந்திய மீனவர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மீன்கள், மின்னியல் பொருட்கள், சிலிண்டர்கள், ஜீ.பி.எஸ்கள் உள்ளிட்ட கருவிகளைக் கொள்ளையிட்டனர்.

இதேநேரம் நேற்று அதிகாலை இரண்டு மணியளவில் மீண்டும் மேலும் இரு இடங்களில் இதே வகையில் தாக்குதல் இடம்பெற்றது. இதன்போதும் பல பொருட்கள் கொள்ளையிடப்பட்டுள்ளன என்று தமிழ மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதன்காரணமாக தமிழக மீனவர்கள் தமக்குள் கூடி ஆராய்கின்றனர். இவ்வாறான தாக்குதல் தொடருமாயின் அடுத்த கட்டமாக மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகள் தொடர்பிலும் ஆராய்கின்றனர்.

---

### பருப்பு விலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வழங்குவது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

சீனிக்குக் கட்டுப்பாட்டு விலை விதிக்கப்பட்டிருந்தாலும், விதிக்கப்பட்ட மொத்த விலையில் சீனி வழங்கப்படாது என்றும், வழங்கல் மட்டுப்படுத்தப்படும் என்றும் மொத்த வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, இறக்குமதி நிறுவனங்கள் கோதுமை மாவின் விலையை அதிகரிக்கமாட்டோம் என்று ஒப்புக்கொண்டன என்று கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்தார்.

---

### ரெலோவும் புளொட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்றுக் கொழும்பில் தனியார் தொலைக் காட்சிஒன்றின்நிகழ்ச்சியில் பங்கு கொண்டு கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு இது தொடர்பில் மேலும் கூறியவை வருமாறு:-

ஜெனிவா அமர்வுக்காக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா சம்பந்தன் தனியான அறிக்கை ஒன்றை ஓர் ஆவணமாகத் தயாரிக்கின்றார். அதை அவர் சார்பில், அவரின் வழிகாட்டலில் தயாரிக்கும் நான், அவரின் அனுமதியோடு மற்றவர்களின் பரிசீலனைக்கு அதை அனுப்புவது என்பதுதான் நாம் இணங்கி இருந்த ஏற்பாடு. அதற்கு மாறான வேறு ஒரு ஏற்பாட்டுக்கும் நாம் இணங்கியிருக்கவில்லை.

அப்படி இருக்கும்போது, அப்படியான ஓர் ஆவணம் வந்த பிறகும், வேறு ஓர் ஆவணத்தில் கையெழுத்திட்டு அவர்கள் அனுப்பி இருக்கின்றனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் சம்பந்தன் ஐயா அனுப்பிய ஆவணம் ஓர் வரைவுதான். அதில் மாற்றங்கள் செய்ய வேண்டி இருந்தால் அதை பேசி நாங்கள் செய்வது தான் முறை.

திங்கட்கிழமை (இன்று) எல்லா நாடாளுமன்ற உறுப்பினர்களும் கொழும்புக்கு வருவார்கள். அன்று நாங்கள் அந்த வரைவு குறித்து விவாதித்து அதை நிறைவு செய்து அனுப்பலாம் என்பதற்காகத்தான் சென்ற வாரத்தில் அந்த வரைவை சம்பந்தன் ஐயாவின் அனுமதியோடு நான் அனுப்பி இருந்தேன். அப்படியிருக்கையில் திடீரென வேறொரு ஆவணத்தில் ரெலோவும் புளொட்டும் கையெழுத்திட்டு அனுப்பியிருக்கின்றன எனச் செய்தி வந்திருக்கின்றது. இது எங்களுக்குப் பெரும் அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் தந்துள்ளது. - என்றார் அவர்.

---

### பொறுமையின் எல்லை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வளத்தையும் வாழ்வாதாரத்தையும் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தீர்மானித்திருப்பதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அண்மைக்காலமாக இந்தியக் கடற்றொழிலாளர்களின் அத்துமீறிய சட்ட விரோத நடவடிக்கைகள் அதிகரித்துள்ள நிலையில், நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சமேளனத்தின் தலைவர் அன்னராசா மற்றும் உப தலைவர் வர்ணகுலசிங்கம் ஆகியோர் மேற்கண்டவாறு கூறினர்.

குறித்த ஊடகச் சந்திப்பில் அவர்கள் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

இந்தியக் கடற்றொழிலாளர்களின் அத்துமீறிய செயற்பாடுகளினால் எமது தொழில் உபகரணங்கள் அழிக்கப்படுகின்றன. அண்மைய நாட்களில் மாத்திரம் எமது கடற்றொழிலாளர்களின் பல மில்லியன் ரூபா பெறுமதியான தொழில் உபகரணங்கள் அழிக்கப்பட்டிருக்கின்றன.

எமது கடலுக்குள் அத்துமீறி வருகின்ற இந்தியக் கடற்றொழிலாளர்களின் செயற்பாடுகள் எமது கடற்றொழிலாளர்களை அச்சுறுத்தும் வகையில் அமைந்துள்ளன. இதனால் கடலுக்கு செல்வதற்கே நம்மவர்கள் அஞ்சுகின்றனர். இதனால் எங்களுடைய மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டிருக்கின்றது.

இந்தப் பிரச்சினை பல ஆண்டுகளாகத் தொடர்கின்ற போதிலும் யாராலும் காத்திரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமல் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது.

எனினும், தற்போதைய கடற்றொழில் அமைச்சர் எமது பிரதேசத்தைச் சேர்ந்தவர். எமது பிரச்சினைகளை அறிந்தவர் என்ற அடிப்படையில் காத்திரமாக அணுகுவார் என்று நம்பினோம்.

அவரும் எமக்குப் பல்வேறு வாக்குறுதிகளை வழங்கினார். ஆனால், இதுவரை காத்திரமான மாற்றங்கள் எதுவும் நடைபெறவில்லை. கடற்றொழில் அமைச்சரால் இந்தியக் கடற்றொழிலாளர்களின் அத்துமீறல் கட்டுப்படுத்தப்படும் என்ற நம்பிக்கையையும் நாம் இழந்து வருகின்றோம்.

அத்துடன், எமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுவது மாத்திரமன்றி எமது கடல் வளத்தையும் அழித்துக்கொண்டிருக்கின்றார்ள். இதனால் எமது சந்ததியே ஆழியும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளோம். இதனைத் தொடர்ந்தும் பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

எனவே, எமது மக்களை அணிதிரட்டிப் போராட்டங்களை நடத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றோம்.

அதனடிப்படையில், கட்டம் கட்டமாக மக்கள் போராட்டங்களை விஸ்தரிக்க தீர்மானித்திருக்கின்ற நாங்கள், முதற்கட்டமாக சமூக இடைவெளிகளை மதித்து, கொரோனா சங்கிலிப் போராட்டத்தையும் நடத்தத் தீர்மானித்திருப்பதுடன், அடுத்த கட்டமாக யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்தியத் துணைத் தூதரகத்தை முடக்குதல் மற்றும் கடலில் இறங்கி கறுப்புக் கொடிப் போராட்டத்தை நடத்துவது தொடர்பாகவும் தீவிரமாகச் சிந்தித்து வருகின்றோம்.

கொறோனா காலத்தில் போராட்டங்களில் ஈடுபடுவது பொருத்தமற்றது என்ற போதிலும் எமக்கு ஏற்படுத்தப்படுகின்ற வாழ்வாதார அச்சுறுத்தல் காரணமாக, சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி போராட்டங்களை நடத்த வேணடிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகியுள்ளோம் - என்றார்.